18-5-1952 M M.Y.M M BANGALORE

போர்வாள்

வாள் 5 வீச்சு 33

17-5-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

ஈரா. இளஞ்சேரலன் B.A Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2

இலங்கை இந்தியர் அறப்போர்!

இந்தியாவுக்குப் பக்கத்தில் உள்ள நாடு—நெடுங்காலமாக இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள நாடு—சமீப காலம் வரையில் இந்தியாவுடன் அரசியல் ரீதியாக இணைந்திருந்த நாடு—இயற்கை அழகு கொழிக்கும் நாடு, இலங்கை

அந்த இலங்கையில் ஏறத்தாழ எட்டு லட்சம் இந்தியர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களெல்லாம் பல தலைமுறைகளாக இலங்கையிலேயே வாழ்ந்து வருபவர்கள்.

இலங்கையையே தங்களுடைய தாயகமாகக் கொண்டவர்கள்.

இலங்கை மண்ணையே தங்களுடைய புனித பூமியாகக் கருதும் உள்ளம் படைத்தவர்கள்.

ஒரு காலத்தில் அவர்களோ அல்லது அவர்களுடைய முன்னோர்களோ இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் குடிபுகுந்தவர்கள் என்ற காரணத்தால் அவர்கள் இந்தியர்கள் என்று அழைக்கப்படுகிறார்களே தவிர, அவர்களை இலங்கையர்கள் என்று அழைப்பதுதான் உண்மை நிலைமையை ஒட்டிய வாசகமாக இருக்கும்.

அவர்கள் இந்தியாவின் பிரஜைகள் அல்ல. இலங்கையின் பிரஜைகள்.

நேற்றைக்கு இந்தியா, இன்றைக்கு இலங்கை, நாளைக்கு மறுபடியும் இந்தியா, அடுத்த நாள் மீண்டும் இலங்கை என்ற விதத்திலே, இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருப்பவர்களல்ல அவர்கள். இலங்கைத் தீவிலேயே தங்களுடைய வாழ்நாள் அவ்வளவையும் கழிப்பது என்கிற திட்டவட்டமான முடிவுக்கு வந்து விட்டவர்கள்.

அவர்களிலே பலர் இந்தியாவைப் பார்த்தது கூடக் கிடையாது. ஏனெனில் அவர்கள் இலங்கையிலேயே பிறந்தவர்கள் அவர்களுடைய தகப்பனோ அல்லது பாட்டனோ தான் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக்குடியேறியவராக இருப்பார்.

இந்த நிலையிலே இருக்கும் அவர்களுக்கு, இலங்கையின் ஏனைய பிரஜைகளுக்கு உள்ள எல்லா உரிமைகளையும் தருவது தான் முறை. அதுதான் நியாயம். அதுதான் ஜனநாயகக் கோட்பாட்டுக்கு ஏற்ற வழியும் கூட.

ஆனால் இலங்கையை ஆளும் அதிகாரவர்க்கம் இந்த உண்மையை ஒப்புக்கொள்ள மறுக்கிறது. அந்த எட்டு லட்சம் இந்தியர்களுக்கும் வாக்குரிமை வைத்தர இயலாது என்று அதிகாரக் குரலில் பேசுகிறது. அண்மையில் இலங்கையில் நடைபெற விருக்கும் பொதுத் தேர்தலில் கலந்துகொள்ளும் உரிமை அவர்களுக்குக் கிடையாது என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறது.

இலங்கை ஆட்சியாளர்களின் இந்தப் போக்கு அநீதி நிரம்பியது. நேர்மைக்கு மாறானது. ஜனநாயகக் கோட்பாட்டுக்கு முற்றிலும் முரணானது.

என்றாலும் இந்தப் போக்கை கைவிட மறுக்கின்றனர் இலங்கை ஆட்சியாளர்கள் இலங்கை இந்தியர்களுக்கு நீதி வழங்க முடியாது என்று ஆணவக் குரலில் பேசுகின்றனர். அதிகாரபீடம் தங்களிடம் இருக்கிறது என்ற ஓரே காரணத்தால் இலங்கை இந்தியர்களின் நியாயமான கோரிக்கையைத் துச்சமென ஒதுக்கித் தள்ளுகின்றனர்.

ஹிட்லர், இத்தகைய முரட்டுப் பிடிவாதம் கொண்டவனாக இருந்தான். அவனுடைய போக்கை நம்மால் புரிந்து கொள்ள முடிந்தது. ஏனெனில் அவன்ஓர் சர்வாதிகாரி. சர்வாதிகாரியிடம் நியாயத்தை எதிர்பார்ப்பது பிறவிச்செவிடனிடம் இசைத்துறைப்புலமையை எதிர்பார்ப்பது போன்ற செயலாகும்.

முசோலினி, இப்படிப்பட்ட அக்கிரமமான பாதையில் நடந்து சென்றான். அவனுடைய செயல் நமக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை. ஏனெனில் முசோலினி மக்கள் மன்றத்தை மதிக்கும் சுபாவம் இல்லாதவன். மக்களின் பகைவன். மக்கட் பகைவன் ஒருவனிடம் மக்களின் நன்மைக்கான நற்காரியத்தை யாரும் எதிர்பார்ப்பது தவறான காரியமாகும்.

தென்னாப்பிரிக்க நாட்டிலுள்ள அதிகார வர்க்கத்தின் தனிப்பெருந் தலைவனாக விளங்கும் டாக்டர் மலான், அந்த நாட்டில்உள்ள இந்தியர்களுக்கு இருக்க இடம் கூட அளிக்க மறுக்கிறான். வாழ வசதி கூட அளிக்க முடியாதென்று கூறுகிறான். வெள்ளையர்கள் வாழும் இடங்களிலே இந்தியர்களும் உடன் வரக்கூடாது என்று 144 போடுகிறான். இங்கே ஆதித்திராவிடர்கள் சேரிகள் என்னும் தனி இடங்களுக்குத் தள்ளப்பட்டிருப்பது போல, அங்கே, இந்தியர்களை, தனியாக உள்ள ஒதுக்குப் புறங்களில் வாழுங்கள் என்று கட்டளை பிறப்பிக்கிறான். மலானின் செய்கை நமக்கு திகைப்பை மூட்டவில்லை ஏனெனில் மலான், இனத்திமிர் பிடித்த வெறியன் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். எட்டிக்காய் கசக்கிறது என்றால் அது நமக்கு ஆச்சரியத்தையா கொடுக்கும்?

"ஜப்பானியர்கள்தான் ஆண்டவனின் பிரத்யேக பிரஜைகள். ஆண்டவனின் விசேஷ அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமானவர்கள் அவர்கள்தான். ஏனைய இனத்தவர்களெல்லாம் ஜப்பானியர்களுக்குக் குற்றேவல் செய்து கிடக்கவே ஆண்டவனால் பிறப்பிக்கப்பட்டவர்கள்" என்று ஜப்பான் நாட்டின் பிரதம மந்திரியாக அன்றோர் நாள் இருந்த டோஜோ அந்தக் காலத்தில் கூக்குரலிட்டான். அந்தக் கூச்சல் நமக்கு அருவருப்பை அளித்ததே தவிர ஆச்சரியத்தை ஊட்டவில்லை. ஏனெனில் டோஜோ, ஹிட்லர் பரம்பரையைச் சேர்ந்தவன், இனவெறியன், என்பதை மாநிலம் முழுவதும் அறியும்.

ஹிட்லர்
முசோலினி
மலான்
டோஜா

இவர்களெல்லாம், தங்களுடைய இனம் மட்டுமே உல்லாசப் பட்டிலேறிக் கொண்டு இன்பபுரிப் பயணம் புரிய வேண்டும் என்று கூறுவது யாருக்கும் வியப்பைத்தரமுடியாத நிகழ்ச்சி அவர்கள் மக்களின் பகைவர்கள். மக்கட் பகைவர்கள் அப்படித்தான் பேசுவார்கள்.

ஆனால் இலங்கைத் தீவின் ஆட்சிப் பீடத்தில் முதலமைச்சராக வீற்றிருக்கும் **சேனநாயகா**வும், அவருடைய கூட்டுத் தோழர்களும், தங்களை ஜனநாயகவாதிகள் என்று அறிவித்துக் கொள்கின்றனர். ஜனநாயக முறையிலேயே இலங்கையை ஆட்சிபுரிந்து வருவதாக அடிக்கடி பறைசாற்றி வருகின்றனர். ஜனநாயகக் கோட்பாட்டில் தங்களுக்குத் தளராத நம்பிக்கை உண்டு என்று உரத்த குரலில் அடிக்கடி உலகத்துக்கு கூறி வருகின்றனர்.

இப்படிப்பட்டவர்கள் இன்றையதினம் இலங்கை இந்தியர்களுக்கு ஓட்டுரிமையைத் தர மறுக்கின்றனர் என்பதைக்காண்கிறபோதுதான் நமக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

சேனநாயகா ஒரு ஹிட்லரல்ல. ஆனால் ஹிட்லருடைய பாதையிலே செல்லுகிறார். அவர் ஒரு முசோலினி அல்ல. ஆனாலும் முசோலினி மார்க்கத்தைப் பக்தி சிரத்தையுடன் கடைப்பிடித்து நடக்கிறார். அவர் ஒரு மலான் அல்ல. நிச்சயமாக மலான் அல்ல அவர். என்றாலும் டாக்டர் மலான் போகிற பாதையைவிட மோசமானதோர் பாதையை இவர் தன்னுடைய பயணத்திற்கேற்ற நெடுஞ்சாலையாகக் கொண்டிருக்கிறார்.

சேனநாயகா ஒரு ஹிட்லராகவோ முசோலினியாகவோ டோஜோவாகவோ மலானாகவோ இருந்து அவர்களுடைய பாதையிலே சென்றிருப்பாரானால் இது சகஜம் என்று கூறிவிட்டிருப்போம் நாம். ஆனால் அவரோ ஒரு ஜனநாயகவாதியாக இருந்துகொண்டே அவர்களுடைய பாதையைப் பின்பற்றுகிறார். இதைத்தான் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இலங்கையிலே உள்ள எட்டு லட்சம் இந்தியர்களும், நாங்கள் இலங்கைப் பிரஜைகள் அல்ல. இந்தியாவின் பிரஜைகள்தான். என்று சொல்லியிருப்பார்களானால், அப்போது, அவர்களுக்கு இலங்கையின் பிரஜா உரிமையைத் தர மறுத்துவிடலாம். மறுப்பதுதான் நியாயம்.

ஆனால் இப்போது?

அவர்கள் அத்தனைபேரும் இலங்கைத் தீவுதான் எங்களுடைய தாய்நாடு என்று கூறுகின்றனர். கூறுகின்றனரா? இல்லை. முழக்கமிடுகின்றனர்.

அவர்கள் இலங்கையையே தங்களுடைய சொந்த நாடாக எண்ணுகின்றனர். இலங்கையின் நன்மை தீமைகளையே தங்களுடைய நன்மைதீமைகளாகக் கருதுகின்றனர். இலங்கையின் உயர்வுக்கும் உன்னதத்துக்கும் பாடுபடுவதையே தங்களுடைய தனிப்பெரும் இலட்சியமாகக் கொண்டிருக்கின்றனர்.

இப்படிப் பட்டவர்களெல்லாம் இலங்கையின் பிரஜைகளல்ல என்றால் வேறு யார்தான் இலங்கையின் பிரஜைகளாக இருக்க முடியும்?

இவர்களுக்கெல்லாம் பிரஜா உரிமையைத் தருவது நியாயமல்ல என்றால் மற்றவர்களுக்குத் தருவது மட்டும் எப்படி நியாயமாக இருந்துவிடமுடியும்?

ஒரு குறிப்பிட்ட மனிதன் ஒரு குறிப்பிட்ட நாட்டின் பிரஜையா அல்லவா என்கிற கேள்வியை முடிவு செய்யவேண்டுமானால் அந்த மனிதன் அந்த நாட்டையே தன்னுடைய தாய்நாடாகக் கருதுகிறானா இல்லையா என்கிற அளவுகோலை வைத்துக் கொண்டுதானே முடிவு செய்ய முடியும்.

அந்த அளவுகோலைக் கொண்டு இலங்கை இந்தியரின் பிரச்சினையை ஆராய்ந்து பார்க்கிறபோது, அவர்களெல்லாம் இலங்கைப் பிரஜைகள்தான் என்பதை, யார்தானாகட்டும், எப்படி மறுத்துவிட முடியும்?

இலங்கை இந்தியர்களிலே யார் யார் இந்தியாவுக்குத் திரும்பிவிட வேண்டுமென்று ஆசைப்படுகிறார்களோ, யார் யார் தங்களை இலங்கையின் பிரஜைகளாகக் கருதுகிறார்களோ, யார் யார் இந்தியாவையே தங்களுடைய தாயகம் என்று அறிவித்து விடுகிறார்களோ, அவர்களுடைய பெயர்களையெல்லாம் இலங்கைப் பிரஜைகள் என்ற பட்டியலிலிருந்து நீக்கிவிடட்டும் இலங்கை சர்க்கார். அது நியாயம். ஆனால் இலங்கையையே தங்களுடைய தாயகம் என்று அறிவித்துவிட்ட மற்ற இந்தியர்களுக்கும் பிரஜா உரிமையைத் தர மறுப்பது என்றால் அது எப்படி நியாயமாகும்?

1949-ம் ஆண்டில் இலங்கையில் நடைமுறையில் இருந்த இலங்கைப் பிரஜைகள் பட்டியலில் ஏறத்தாழ இரண்டு இலட்சம் இலங்கை இந்தியர்கள் இடம் பெற்றிருந்தனர்.

1950-ம் ஆண்டில் புதிய பட்டியல் தயாரிக்கப்பட்டது. இந்தப் பட்டியலில் முன் பட்டியலில் காணப்பட்ட இந்தியர்களின் பெயர்கள் அவ்வளவும் நீக்கப்பட்டுவிட்டன.

அப்படி நீக்கப்பட்ட இந்தியர்களில் யார் யார் தங்களை இலங்கையின் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ள விரும்புகிறார்களோ அவர்களெல்லாம், தாங்கள் இலங்கையின் பிரஜைகள்தான் என்பதை நிரூபிக்கும் ஆதாரங்களை உடன் வைத்து, இலங்கை ஆட்சியாளர்களுக்கு விண்ணப்பம் போடும்படி அந்த ஆட்சியாளர்களே அறிவித்தனர்.

1951-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5-ம் தேதியே, அப்படிப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்குரிய கடைசி நாள் என்றும் அறிவிப்புச் செய்தனர் இலங்கை ஆளவந்தார்கள்.

இலங்கை ஆட்சியாளர்களின் அறிக்கை வெளிவந்த தேதிக்கும், விண்ணப்பம் போடுவதற்குரிய கடைசி தேதிக்கும் இடையே இருந்த கால வெளி மிகவும் குறுகியதாக இருந்த காரணத்தால், மொத்தமுள்ள எட்டு லட்சம் இந்தியர்களில் சுமார் இரண்டரை லட்சம் பேர் மட்டும்தான் விண்ணப்பம் போட முடிந்தது

குறிப்பிட்ட தேதிக்குள் விண்ணப்பம் போட முடியாத மற்றவர்களெல்லாம், விண்ணப்பம் போடுவதற்குரிய கடைசி தேதியைச் சற்று ஒத்திவைக்கவேண்டும் என்று பணிவுடன் வேண்டிக்கொண்டனர்.

ஆனால் அந்த வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை இலங்கை அரசாங்கம்.

தேதி ஒத்தி வைக்கப்படவில்லை. எனவே ஏனைய இலங்கையர்கள் விண்ணப்பம் போட முடியவில்லை.

விண்ணப்பம் போட்ட இரண்டரை இலட்சம் தோழர்களையாவது பிரஜைகள் பட்டியலில் இணைத்துக் கொண்டுவிட்டார்களா இலங்கை ஆட்சியாளர்கள் என்று பார்த்தால், அதுவுமில்லை.

அந்த இரண்டரை இலட்சம் பேரிலே சுமார் எட்டாயிரம் பேரைமட்டும்தான் பட்டியலில் இணைத்துக் கொண்டிருக்கின்றனர்.

மற்றவர்களுடைய விண்ணப்பங்களையெல்லாம் அதற்கென்று அமைந்துள்ள அதிகாரிகள். இப்போதுதான் பரிசீலனை இன்னும் முடியாத காரணத்தால் அவர்களெல்லாம் இப்போது நடைபெறவிருக்கிற இலங்கைப் பொதுத்தேர்தலில் வாக்காளர்களாக இருக்க முடியாதென்றும், பொதுத் தேர்தல் முடிந்தபிறகுதான் அவர்களுடைய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் என்றும், அப்படிப் பரிசீலிக்கப்பட்ட பிறகுதான் அவர்கள் வாக்காளர்களாக ஏற்றுக்கொள்ளப் படுவார்களென்றும் தெரிவித்து விட்டனர் இலங்கை அதிகார வர்க்கத்தினர்.

(6-ம் பக்கம் பார்க்க)

ஆபத்தான ஆலோசனை!

கோடிவீட்டுக் கோபாலன், மாடிவீட்டு மஞ்சுளா மாயைக் கத்தியால் குத்திக் கொன்றுவிடுகிறான். இதை நேரில் பார்த்துவிட்டான் எதிர்வீட்டு ஏகாம்பரம்! ஆஹா என்ன கொடுமை செய்துவிட்டான் கோபாலன் என்று மனம் குமுறுகிறான். மனம் குமுறுகிறானே தவிர, மற்றொரு கத்தியை எடுத்துச் சென்று கொலை செய்த கோபாலனைக் குத்திக் கொல்வதன் மூலம், கோபாலனுக்குத் தண்டனை கொடுக்கும் அதிகாரம் உண்டா ஏகாம்பரத்திற்கு? கிடையாது. வேண்டுமானால், கொலை செய்துவிட்டான் கோபாலன் என்று போலீஸ் ஸ்டேஷனுக்குப் புகார் செய்யலாம் ஏகாம்பரம். அவ்வளவுதான் அவன் செய்யமுடியும். நேரிலே தான் பார்த்தான் கொலையை என்றாலும் தண்டனையைத் தரும் அதிகாரம் அவனுக்குக் கிடையாது.

சிலர் அல்லது பலர் சட்டத்தை மீறிச் சிலபலர் குற்றங்களைச் செய்துவிடலாம். அவர்கள் குற்றங்களைப் புரிந்தவர்கள்தான் என்பதற்கு மறுக்கமுடியாத சாட்சியங்கள் இருக்கலாம். தாங்கள் குற்றவாளிகள்தான் என்பதை அவர்களே கூட ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கலாம். அப்படியெல்லாம் இருந்தாலும்கூட, குற்றவாளிகளை யார் வேண்டுமானாலும் தண்டித்துவிட முடியாது. குற்றவாளிகளைத் தண்டிக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்குத்தான் உண்டு. வீதியிலே போகிற எல்லோருக்கும் கிடையாது அந்த அதிகாரம்.

நாகரிக சமுதாயம் ஒவ்வொன்றிலேயும், அந்த சமுதாயத்தின் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு அந்த சமுதாயத்தின் ஆட்சியாளர்கள், அந்தப் பொறுப்பை, போலீசாரிடமும் நீதி மன்றத்திடமும் ஒப்படைத்திருக்கின்றனர்.

சட்டத்தை மீறி யாராவது நடந்துகொண்டால், அவர்களை போலீஸ் கைது செய்கிறது.

கைது செய்து தன்முன் குற்றவாளிகள் என்று நிறுத்தப்பட்டிருப்பவர்களை நீதி மன்றம் விசாரணை புரிகிறது.

அவர்கள் குற்றவாளிகள் தான் என்பதற்கு இருக்கின்ற சாட்சியங்களையும், அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்பதற்கு உள்ள ஆதாரங்களையும் அலசி ஆராய்ந்து பார்த்து எது உண்மை என்பதைக் கண்டறிகிறது நீதிமன்றம்,

உண்மை தெளிவானபிறகு, குற்றவாளிகள் என்று நிறுத்தப்பட்டிருப்பவர்கள் உண்மையிலேயே குற்றவாளிகளாயிருந்தால், நீதி மன்றம், சட்டப்படி உள்ள, தண்டனையை! அவர்களுக்குவிதிக்கிறது. அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டால், அவர்களை விடுதலை செய்கிறது நீதி மன்றம்.

ஒருவன் கொலை செய்துவிட்டவன் என்பது திட்டவட்டமாகத் தெரிந்தாலும் கூட, அவன் நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டபிறகுதான் அவன் தூக்குமரத்தில் ஏற்றப்படுவான். அதற்கு முன்னதல்ல.

சட்டத்தை மீறுபவர்களை யார் வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் தண்டித்துவிடலாம் என்கிற நிலைமை எந்த நாகரிக நாட்டிலும் கிடையாது. ஏனெனில் அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் யார் வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் தண்டிக்கலாம் என்று ஏற்பட்டுவிடும். அப்படி ஏற்பட்டுவிட்டால் ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் கொன்று குவிக்கவும் அடித்து மிரட்டவும் தயாராகிவிடுவர்; அப்படித் தயாராகிவிட்டால் காட்டிலே அராஜகமும் குழப்பமும் மிருகத்தனமும்தான் தாண்டவமாடும். அமைதி, பாதுகாப்பு, சாந்தி, சமாதானம் இவைகளெல்லாம் இருக்கமாட்டா.

இப்படிப்பட்ட குழப்பமும் விபரீதமும் உருவாகக் கூடாது என்பதற்காகத்தான் ஒவ்வொரு நாகரிக சமுதாயத்திலேயும் சட்டம் என்கிற ஓர் அமைப்பும், அந்த சட்டத்தை மீறுபவர்களைத் தண்டிக்கும் உரிமை நீதிமன்றத்திற்கு மட்டும்தான் உண்டு என்கிற ஒரு விதிமுறையும் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

அரசாங்கக் கலையின் அரிச்சுவடி இது. ஆனால் இந்த அரிச்சுவடியைக்கூடக் கற்றுத் தெளிந்தவராகக் காணப்படவில்லை ராஜாஜியின் மந்திரிசபையிலே ஒருவராக இருக்கும் அன்பர் பழனிசாமி கவுண்டர்.

காங்கிரஸ் கட்சிக்காரர்கள் நாட்டிலே நடமாடவிட்டிருக்கிற மதுவிலக்குத் திட்டம் படுதோல்வி அடைந்துவிட்டது.

ஒவ்வோர் ஊரிலும் கள்ளச் சாராயம் காய்ச்சுவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு போகிறது.

இதற்குமுன்பு குடி என்றால் என்ன என்பதை அறியாதவர்களெல்லாம் கூட இப்போது குடிக்கும் கலையில் நிபுணர்களாகவும் பேராசிரியர்களாகவும் ஆகிவிட்டனர்.

குடித்துவிட்டுக் கைதாகுவோரின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு, திங்களுக்குத் திங்கள், கிழமைக்குக் கிழமை வளர்ந்துகொண்டே இருக்கிறது.

மதுவிலக்குத் திட்டம் முழுத்தோல்வி அடைந்துவிட்டது என்பதைக் காங்கிரஸ்காரர்களிலேயே பலர் வெளிப்படையாக அறிவிக்கத் தொடங்கிவிட்டனர்.

இனி மதுவிலக்குத் திட்டத்தை ஒழித்துவிட வேண்டியதுதான், வேறு வழியில்லை என்று பல தேசியத் தலைவர்கள் சலிப்புச் சிந்து பாடிக்கொண்டிருக்கின்றனர் சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக.

மதுவிலக்கு இயக்கத்தின் மாபெருந்தலைவர் என்று பட்டம் சூட்டி அழைக்கப்படுகிற ஜகோவிந்தம் புகழ் ஆச்சாரியார்கூட, முன்போல, மதுவிலக்குத் திட்டத்தைப் பற்றித் தைரியமாகவும் உறுதியாகவும் பேசமுடியவில்லை இப்போது,

கள்ளத்தனமாகக் கள்ளைக் காய்ச்சுவோரையும் குடித்துப் புரளுவோரையும் கண்டுபிடிப்பதற்கென்று ஒரு பெரிய இலாகாவே வேலை செய்து வருகிறது.

என்றாலும் மதுவிலக்குத் திட்டம் வெற்றிபெற முடியவில்லை.

வாராவாரம் நூற்றுக்கணக்கானவர்களை, அல்ல, ஆயிரக் கணக்கானவர்களை, திருட்டுத்தனமாகக் கள்ளைக் குடித்தவர்கள் என்ற காரணத்திற்காகச் சிறைச்சாலைக்குள் அடைத்துப் பார்த்தாயிற்று.

அந்த முறையாலும் திட்டம் வெற்றிபுரியை எட்டிப் பார்க்க முடியவில்லை.

மதுவிலக்குத்திட்டம் முழுத் தோல்வி என்பதைக் கண்ட மதுவிலக்கு அமைச்சர் பழனிச்சாமி கவுண்டரின் உள்ளம் உடைந்துபோயிருக்கிறது.

உடைந்த உள்ளத்தோடு பேசியிருக்கிறார் பழனிசாமியார்—கோவையில்—அண்மையில்.

அவருடைய உள்ளம் உடைந்துபோயிருக்கும் காரணத்தால் அவர், தான் கூறுவது எவ்வளவு ஆபத்தான யோசனை என்பதைக்கூட எண்ணிப் பார்க்க முடியாமல், ஒரு பொறுப்பற்ற யோசனையைப் பொதுமக்களில் ஒரு சாராருக்கு அளித்திருக்கிறார்.

"மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெற முடியவில்லை என்று பலரும் பேசுகிறார்கள். அந்தத் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால் அதற்குச் சுலபமானதோர் வழி இருக்கிறது. மதுவிலக்குச் சட்டத்தை மீறிக் கள்ளைக் குடித்துவிட்டுப் புரளும் குடியர்களுக்கு க்ஷவரம் செய்யவோ துணி வெளுக்கவோ முடியாதென்று க்ஷவரத் தொழிலாளிகளும் சலவைத் தொழிலாளிகளும் தெளிவாகக் கூறிவிடவேண்டும். குடியர்களை அடியோடு பகிஷ்காரம் செய்துவிட வேண்டும். அவர்கள் இப்படிச் செய்வதிலே தவறு எதுவுமில்லை."

இப்படிப் பேசியிருக்கிறார் பழனிசாமியார். மதுவிலக்குத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்ட ஒரு மகத்தான சர்க்காரை நடத்திச் செல்லுகிற இவரால் ஆகவில்லை என்பது தெளிவாகிவிட்டது இந்தப் பேச்சிலிருந்து.

மதுவைத் தடை செய்யப் பல சட்டங்கள், அந்த சட்டங்களை அமுல் நடத்த பல போலீஸ் படைகள், அந்தப் படைகளால்கொண்டு வந்து நிறுத்தப்படும் குற்றவாளிகளை விசாரிக்க ஏராளமான நீதி மன்றங்கள், அந்த நீதி மன்றங்களால் அனுப்பப் படுபவர்களைப் போட்டு அடைக்க எண்ணற்ற சிறைச்சாலைகள், அந்த சிறைச்சாலைகளை நடத்திச் செல்வதற்குத் தேவையான பண வசதி, இவ்வளவும் இருக்கின்றன காங்கிரஸ் அரசாங்கத்திற்கு.

இவ்வளவும் இருந்தும் இந்த சர்க்காரால் மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்த முடியவில்லை.

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிப் பீடத்தில் தொடர்ந்து இருந்து வந்திருக்கின்றனர் இந்தத் தேசபக்தர்கள்.

என்றாலும் மதுவிலக்குத் திட்டம் முழுத் தோல்வியைத்தான் கண்டு வருகிறது. வெற்றி என்றால் என்ன என்பதை அந்தத் திட்டத்தால் இன்னமும் கண்டறிய முடியவில்லை.

மதுவிலக்குத் திட்டதை வெற்றிகரமாக அமுல் நடத்த முடியவில்லை காங்கிரஸ் ஆட்சியாளர்களால் என்றால், அது, அவர்களுடைய கையாலாகாத்தனத்தைத்தான் காட்டுகிறது.

இந்தத் திறமையின்மையை வெளியே சொல்லாமல் மூடுமந்திரமாகவாவது வைத்துக்கொண்டிருக்கக் கூடாதா மதுவிலக்கு அமைச்சர் பழனிசாமியார்? வெளிப்படையாகச் சொல்லிவிடுகிறார்!

சொல்வதைத் தான் சொல்கிறாரே! "எங்களால் மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிபுரிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க முடியவில்லை. ஆகையால் பொதுமக்களே, நீங்கள் தான் இந்தத் துறையில் சற்று அதிகமாகக் கவனம் எடுத்துக்கொண்டு வெற்றியை எங்களுக்குத் தேடித் தரவேண்டும்" என்று பொதுப்படையாகச் சொல்வதோடு நிறுத்திக் கொள்ளக் கூடாதா அவர்?

குற்றவாளிதனை நீங்களே தண்டியுங்கள் என்று கூறுகிறார்.

எவ்வளவு ஆபத்தான ஆலோசனை இது?

ஒரு பொறுப்புள்ள அமைச்சர் சொல்லக்கூடிய வாசகமா இது?

சட்டத்தை மீறிக் குடிப்பது சட்டப்படி குற்றமான காரியமாக இருக்கலாம்.

ஆனால் அதற்காகக் குற்றவாளியை யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் தண்டிக்கலாம் என்று ஒரு பொறுப்புள்ள பெரிய மனிதர் கூறுவது முறைதானா?

சட்டத்தை மீறி நடந்து குற்றம் புரிகிறவர்களைத் தண்டிக்கிற உரிமை நீதி மன்றங்களுக்குத்தான் உண்டு, மற்றவர்களுக்குக் கிடையாது என்பது நாகரீக வாழ்க்கையின் முதல் பாடமாயிற்றே! இந்தப் பாடத்தைக் கூடப் படிக்காமலா அமைச்சராகி விட்டார் பழனிசாமியார்?

குடிப்பவர்களுக்கெல்லாம் துணி வெளுக்காதீர்கள்...முகம் வழிக்காதீர்கள் என்று கூறுகிறாரே பழனிசாமியார், இவர் கூறும் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, துணி வெளுப்பவர்களும் முகம் வழிப்பவர்களும், குடிகாரர்களை மட்டுமல்ல, வேறு யார் யாரெல்லாம் குற்றவாளிகள் என்று அவர்களுக்குத் தோன்றுகிறதோ அவர்களையெல்லாம் கூட இதே முறையில் தண்டிப்பது என்று தொடங்கி விடுவார்களானால், அப்போது என்ன செய்வார் இந்தப் பேரறிவாளர்?

உதாரணத்திற்குச் சொல்லுகிறோம். காங்கிரஸ்காரர்களுடைய ஆட்சி இந்த நாட்டில் இருக்கின்ற காரணத்தால் தான் இந்த நாட்டில் பட்டினிச் சாவுகளும் அடக்குமுறைக் கொடுமைகளும் ஏராளமாக நிகழ்கின்றன, ஆகவே காங்கிரஸ்காரர்களைவிடப் பெரிய குற்றவாளிகள் யாரும் இல்லை என்று எண்ணிக்கொண்டு, துணி வெளுப்பவர்களும் முகம் வழிப்பவர்களும் காங்கிரஸ்காரர்களையெல்லாம் பகிஷ்கரிப்பது என்று ஆரம்பித்து விட்டால் அதனை எப்படி குறை கூற முடியும் பழனிசாமி கவுண்டர்?

வியாபாரிகள்
டாக்டர்கள்
வக்கீல்கள்
சர்க்கார் குமாஸ்தாக்கள்
ஆசிரியர்கள்
பள்ளிக்கூட நிர்வாகிகள்
தொழிற்சாலையின் உரிமையாளர்கள்
காய்கறி விற்பவர்கள்

ஆகிய எல்லோரும் காங்கிரஸ்காரர்களைவிட இந்த நாட்டின் நன்

(16-ம் பக்கம் பார்க்க)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆம்! இலங்கையில் வாழ்கின்ற எட்டு இலட்சம் இலங்கை இந்தியரில் எட்டாயிரம் பேருக்கு மட்டும்தான் இந்த மே மாதத்தில் இலங்கையில் நடைபெறும் பொதுத் தேர்தலில் வாக்காளர்களாக இருக்கும் உரிமையும் இலங்கைப் பிரஜைகளாக வாழும் உரிமையும்கொடுக்கப்பட்டிருக்கின்றன இலங்கை ஆட்சியாளர்களால்!

இந்த மாதத்தில் நடைபெறவிருக்கிற பொதுத் தேர்தலை முன்னிட்டு, சென்ற மாதத்தில் தான் கலைக்கப்பட்டது இலங்கை சட்டசபை.

அந்த சட்டசபையிலே ஏழு பேர் இலங்கை இந்தியர்களின் பிரதிநிதிகளாக வீற்றிருந்தனர்.

ஆனால் இப்போது நடைபெறப்போகும் பொதுத் தேர்தலின் முடிவாக ஏற்படவிருக்கிற சட்டசபையிலோ, ஒருவர்கூட, இலங்கை இந்தியர்களின் பிரதிநிதியாக உள்ளே நுழையமுடியாது.

ஏனெனில், முன்பு, ஏறத்தாழ இரண்டு இலட்சம் இலங்கை இந்தியர்களுக்கு வாக்குரிமை இருந்தது. ஆனால் இப்போதோ எட்டாயிரம் பேருக்கு மட்டும்தான் அந்த உரிமை இருக்கிறது.

இந்த நிலையில் இலங்கை இந்தியர்களின் பிரதிநிதியாக யாரேனும் ஒருவர் இலங்கை சட்டமன்றத்தை எட்டிப் பார்க்க முடியும் என்பது சிறிதும் இயலாத காரியமே யாகும்.

எட்டு லட்சம் ஜனத்தொகை உடைய ஒரு மாபெரும் சமுதாயத்திற்கு, அந்த சமுதாயம் அமைந்துள்ள நாட்டிலே நடைபெறும் பொதுத் தேர்தலில் கலந்துகொள்ளும் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது என்றால் இதைவிடப் பெருங் கொடுமை வேறென்ன இருக்க முடியும்?

வாக்குரிமை! அதுதான் ஜீவாதார உரிமை ஜனநாயக நாடுகளில் வாழும் பிரஜைகளுக்கு!

நாட்டை எப்படிப்பட்டவர்கள் ஆளவேண்டும், என்பதையும், அவர்களுடைய ஆட்சி எப்படிப்பட்ட முறையில் அமைந்திருக்கவேண்டும் என்பதையும் நிர்ணயிப்பதற்குப் பொது மக்களிடம் இருக்கிற ஒரே ஒரு ஆயுதம், ஆனால் வன்மை மிக்க ஆயுதம், கூர்மை நிறைந்த ஆயுதம், வாக்குரிமை.

இப்போது ஆட்சியாளராக இருக்கின்ற கட்சிக்காரர்கள் சிறந்த முறையில் நாடாளவில்லை என்றால் அவர்களை விலக்கவும், வேறு கட்சிக்காரர்கள் நல்ல முறையில் நாடாளும் தகுதி படைத்தவர்கள் என்று தெரிந்தால், அவர்களை ஆட்சிப் பீடத்தில் அமரவைக்கவும் பொதுமக்களால் இன்று முடிகிறது என்றால், அதற்குக் காரணமாக இருப்பது அவர்களிடமுள்ள வாக்குரிமைதான்.

வாக்குரிமை என்கிற அடிப்படையின்மீதுதான் ஜனநாயகம் என்கிற கட்டிடம் எழுப்பப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட பலம்பொருந்திய ஓர் ஆயுதத்தைத்தான் எட்டு லட்சம் இலங்கை இந்தியர்களிடமிருந்து தட்டிப் பறித்துவிட்டனர் அந்த நாட்டை ஆண்டுவருகிற சேனநாயகா குழுவினர்.

இந்த அக்கிரமத்தை, அநீதியை, அளவுகடந்த அநியாயத்தை, எப்படிச் சகித்துக் கொள்ளமுடியும் இலங்கை இந்தியர்களால்?

இலங்கையிலே இந்த மாதம் பொதுத் தேர்தல் நடைபெறப் போகிறது.

அந்தப் பொதுத் தேர்தலில் இலங்கை மக்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள்.

அந்தப் பிரதிநிதிகளைக் கொண்டு, பிறகு, இலங்கை சட்டசபை அமைய இருக்கிறது.

அந்தச் சட்டசபையிலிருந்து, அதன்பிறகு, இலங்கை மந்திரி சபை அமைய இருக்கிறது.

அடுத்த பொதுத்தேர்தல் நடைபெறும் வரையில் அந்த மந்திரிசபையிடம்தான் நாட்டை ஆளும் பொறுப்பு ஒப்படைக்கப்படவிருக்கிறது.

இவ்வளவும் சாமான்யமான நிகழ்ச்சிகளா? சரிதான் போ—நடக்கட்டும் என்று ஒதுக்கி விடக்கூடிய சாதாரண சம்பவங்களா? இல்லை! அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்கு இலங்கையின் தலைவிதி எப்படி இருக்க வேண்டும் என்பதை வரையறைத்துக் காட்ட இருக்கின்ற மகத்தான சம்பவங்கள்! இலங்கை வரலாற்றில் இடம் பெறவேண்டிய மாபெரும் நிகழ்ச்சிகள்!

இவ்வளவு சிறப்பும் செல்வாக்குமுடைய நிகழ்ச்சிகளில் தான் இலங்கை இந்தியர்களுக்குத் துளியளவும் பங்கில்லை என்கிற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இந்த நிலைமையை எப்படிப் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டு மௌனமாக இருத்தல் இயலும் இலங்கை இந்தியர்களால்?

எனவேதான் இலங்கை இந்தியர் காங்கிரஸ், ஆட்சியாளர்கள் இந்தப் போக்கை எதிர்த்து அறப்போர் தொடங்கியிருக்கிறது.

சமாதானமான முறையிலும், சட்டபூர்வமான வகையிலும், நாட்டின் அமைதிக்குத் துளியளவும் கேடு பயக்காத தன்மையிலும், போர், நடத்தப்பட்டு வருகிறது.

அறப்போர்த் தலைவர்கள், இலங்கை முதலமைச்சரின் அலுவலகத்தின் முன் உண்ணாநோன்பு இருந்து வருகின்றனர்

அஞ்சா நெஞ்சம் தியாக உணர்ச்சியும் படைத்த இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் தியாகத் தீயில் குதித்தெழத் தங்களைத் தாங்களே சமர்ப்பித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஊர்வலத்திற்குத் தடை உத்தரவு போடுவது, மறியல்தொண்டர்களைக் கைது செய்து யாரும் அறியாத இடத்தில் கொண்டு போய் விட்டுவிட்டு வருவது, அறப்போர்த் தலைவர்களின் நோக்கத்திற்கு மாசு கற்பிப்பது முதலான அருவருக்கத் தக்க முறைகளைக் கையாண்டு இலங்கை இந்தியர்களின் போராட்டத்தை அடக்கி அழிக்கப் பார்க்கின்றனர் இலங்கை ஆட்சியாளர்கள்.

ஆனால் அறப்போர் நாளுக்கு நாள் பலம் பெற்று வருகிறது.

இலங்கை இந்தியர்கள் மட்டுமல்ல, இலங்கையில் உள்ள பெரும்பான்மைச் சமூகமாகிய சிங்களவர்களிற் கூட பலர் அறப்போராட்டத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

இரண்டு சிங்களவர்கள் அறப்போர்த் தலைவர்களாக உள்ள இலங்கை இந்தியர்களுடன் கூட்டாக இருந்து உண்ணாவிரதம் தொடங்கியிருக்கின்றனர்.

இலங்கையில் உள்ள பல பகுதி மக்களிடத்திலேயும் அறப்போருக்கான நல்லாதரவு திரண்டு வருகிறது.

இந்த அறப்போராட்டத்தை முன் நின்று நடத்திவரும் இலங்கை இந்தியர் காங்கிரஸ்என்கிற கழகத்தின் அரசியல் கொள்கைகள் அனைத்தும் நமக்கு உடன்பாடானவை அல்ல.

நாட்டின் நன்மைக்கு மாறான திட்டங்களும் நடைமுறைகளும் அவர்களிடம் பற்பல உண்டு.

ஆனால் அந்த அறப்போராட்டத்தைப் பொறுத்த அளவில், அவர்களுடைய நோக்கமும் நடைமுறையும் முற்றிலும் நேர்மையானவை. சிறந்தவை. தூய்மை மிகுந்தவை.

அவர்கள் இந்த அறப்போரை நடத்தி வரும்முறை உண்மையிலேயே நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது.

சென்ற வாரத்தில் இரண்டு நாட்கள், இலங்கையில், புத்தர் திருவிழா கொண்டாடப்படும் நாட்களாக இருந்தன.

அந்த நாட்களின் போது போராட்டத்தை நடத்துவது முறையல்ல என்று எண்ணி, அந்த இரு நாட்களும் போரை நிறுத்திவைத்தனர் போர்த் தலைவர்கள்.

அந்த அளவுக்குஅறப்போர்த் தளபதிகள் நீதியையும் நேர்மையையும் சகிப்புத்தன்மையையும் காட்டி வருகின்றனர்.

இலங்கை இந்தியர்கள்நடத்தி வருகிற இந்த நியாயமான போராட்டத்தை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்.

இந்தப் போர் விரைவில் வெற்றி விழாவினைக்கொண்டாடுகிற இன்ப நிலை உருவாக வேண்டும் என்பது நம்முடைய ஆசை.

இலங்கை ஆட்சியாளர்களுக்கும் ஒரு வார்த்தை :—

“ஆட்சியாளர்களே! சட்டத்தில் உள்ள சந்துபொந்துகளைக் கட்டிக்கொண்டு இன்னமும் காலம் கடத்திக் கொண்டு இருக்காதீர்கள். அறப்போர்த் தலைவர்களை அழையுங்கள். கூடிக் கலந்து பேசுங்கள். இலங்கை இந்தியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள். இந்த மாதத்தில் நடைபெறவிருக்கிற பொதுத் தேர்தலில் எல்லா இந்தியர்களுக்கும் வோட்டுரிமை உண்டு என்கிற அறிவிப்பைச் செய்யுங்கள். தற்காலிகமாக, இந்தத் தேர்தலின் போதுமட்டும் என்ற நிலையிலாவது இந்த வோட்டுரிமையை வழங்குங்கள். தேர்தல் முடிந்தபிறகு, சம்பந்தப்பட்ட எல்லோருமாகக் கலந்து பேசி, இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கான ஒரு நிலையான முடிவுக்கு வரலாம், ஆட்சியாளர்களே! உடனே இந்த முடிவுக்குவாருங்கள். நியாயத்தை, நேர்மையை இப்போதேனும் கடைப்பிடிக்க எண்ணுங்கள். “எட்டு லட்சம் மக்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு பெரிய சமுதாயத்தை அதிருப்தியடைந்த நிலையிலே இருக்கவைத்துவிட்டு இலங்கையில் நல்லாட்சியை ஏற்படுத்துவது என்பது சிறிதும் இயலாத செயல். குமுறும் எரிமலை மீது அமர்ந்துகொண்டு வீணை வாசிக்க முயல்வது போன்ற காரியமாகும் அது. இந்த உண்மையை உணருங்கள் நேர்மைப்பாதைக்குவாருங்கள்”

* * *

வாழ்க இலங்கை இந்தியர்களுடைய அறப்போர்! வெல்க அவர்களுடைய இலட்சியம்!

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

பறவையைச் சுட்டு வீழ்த்தி மகிழ்கின்ற வேடனைப் போல;

“ஏண்டா ரூபாயை வெச்சுக்கிட்டு பொய்யா பேசறே?—இது வரைக்கும் பொய்யோ பேசியிராத போலீஸ்காரனின் பேச்சு. ஒரு ரூபாயை எடுத்துக்கொண்டு சொல்லாமல் நழுவிவிட்டான் போலீஸ்காரன்.

கந்தன் தன்னுடைய ஒருநாள் உழைப்பின் பலன் கொள்ளை போனதைப் பற்றி என்னவும் கவலை கொள்ளவில்லை; போலீஸ்காரனின் நடத்தையைக் கண்டுதான் கவலை கொண்டான்; உலகம் எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கவலை கொண்டான்; யாரிடம் அகப்பட்டுக் கொண்டு இந்த உலகம் தவிக்கிறது என்பதை உணர்ந்து கவலை கொண்டான்.

தன் குடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு மீண்டும் தன் குடிசையை நோக்கி அடியெடுத்து வைத்தான்; அவன் மனம் எதை எதையோ சிந்தனை செய்துகொண்டிருந்தது.

போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 17—5—52 சனிக்கிழமை

புதிய மொந்தை! பழைய கள்!

விஜய நகர சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி, கிருஷ்ண தேவ ராயர்.

அவருடைய தர்பாரின் நகைச் சுவையரசன், தென்னாலிராமன்.

விகடபூபதி தென்னாலிராமன், மன்னர் மன்னன் கிருஷ்ண தேவ ராயருக்கு மகிழ்ச்சியும், எழுச்சியும் ஊட்டுவதற்காகப் பல குறும்புகள் செய்வது வழக்கம்.

அந்தக் குறும்புகளைப் பார்த்தும் பிறர் சொல்லக் கேட்டும் அளவற்ற மகிழ்ச்சி யடைவது ராயரின் பண்பு.

ஆனால் ஒரு நாள் தெனாலிராமனின் குறும்பு எல்லைமீறிச் சென்றுவிட்டது. ஆகவே அரசரின் கோபம் கட்டுக்கு அடங்காததாக ஆகிவிட்டது.

ராமா! இனி உன் முகத்தை இங்கே காட்டாதே! போ வெளியே! என்று ஆத்திரத்தோடு கூவினார் அரசர்.

பயந்து பதைபதைத்து ஓடியே போய் விட்டான் ராமன்.

மறுநாள் காலை வழக்கம்போல மன்னருடைய தர்பார் தொடக்கமாயிற்று.

தர்பார் தொடக்கமானது தான் தாமதம், யாரோ ஒருவன் ஒரு பெரிய பானையைத் தன் தலையில் கவிழ்த்துக் கொண்டு, வழக்கமாக தென்னாலிராமன் அமர்ந்து கொண்டிருக்கும் நாற்காலியில் வந்து உட்கார்ந்தான்.

ஆள் யார் என்பது புரியவில்லை ராயருக்கு.

"டேய்! யாரடா நீ?"—உரத்த குரலில் கேட்டார் மன்னர்.

"நான்தான் அரசரே, ராமன், தங்களுடைய நகைச் சுவைத் தோழன்."

"அட பாவி! நீயா! உனக்கு ஏன் இந்த வேஷம்!"

"ஏன்? நீங்கள் தானே நேற்று சொன்னீர்கள்?"

"தலையிலே பானையைக் கவிழ்த்துக்கொண்டு வா என்று நான் சொன்னேன்?"

"இல்லை வேந்தரே! இனி உன் முகத்தை என் முன் காட்டாதே என்று சொன்னீர்கள்! தங்களுடைய கட்டளையை அப்படியே நிறைவேற்ற வேண்டியது என் கடமை அல்லவா? ஆகையால் தான் என் முகத்தைத் தங்களுக்குக் காட்டாமல் இருப்பதற்காகக் கழுத்து வரையில் ஒரு பானையைக் கவிழ்த்துக் கொண்டு வந்திருக்கிறேன்."

ராமனின் விடையைக் கேட்டதும் சபையில் பலத்த சிரிப்பு.

அகில இந்திய காங்கிரசின் இருதய பீடம் என்று அசோக சக்ரதாரிகளால் அருமையாக அழைக்கப்படும் பண்டித நேரு, இந்த வாரம், ஏறத்தாழ தென்னாலிராமனைப் போலவே நடந்து கொண்டிருக்கிறார்.

பண்டித நேருவின் மந்திரி சபைதான் சென்ற ஐந்து ஆண்டுகளாக அகில இந்தியாவையும் ஆண்டு கொண்டிருந்தது.

அந்த மந்திரி சபையின் நடவடிக்கைகளாலும் நிர்வாகத்தாலும் அகில இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ள கெட்ட பெயர் ஏராளம்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் என்ற பட்டத்தோடும் அந்தஸ்தோடும் இந்தியாவிலிருந்து வேறு நாடுகளுக்கு அனுப்பப் பட்டவர்கள் இலட்சக் கணக்கிலும் கோடிக் கணக்கிலும் ஏழை இந்தியாவின் வரிப்பணத்தை வாரி இறைத்து, வீண் செலவுகளிலும் வெறும் பகட்டுகளிலும் உழைத்ததைப் பறி கொடுத்து விட்டு, டம்பாச்சாரி வாழ்வு வாழ்ந்தது இந்த மந்திரி சபையின் காலத்தில்தான்.

இந்தியப் பட்டாளத்திற்கு ஜீப் கார்கள் வாங்க வேண்டும் என்று ஆரம்பித்து, போதுமான மூலதனமோ தேவையான திறமையோ இல்லாத ஓர் ஆங்கிலேயக் கம்பெனியிடம் ஆர்டரைக் கொடுத்து விட்டு, அப்படிக் கொடுத்த காரணத்தால் இலட்சக்கணக்கான ரூபாய்களை இந்தியா இழந்து தவித்தது இந்தக் காலத்தில்தான்.

அகதிகள் வாழ்வதற்காக வெளி நாடுகளிலிருந்து 'ரெடிமேட்' வீடுகளை இறக்குமதி செய்து, அந்த வீடுகள் ஓட்டைகள் பல நிறைந்ததாக இருக்கும் காரணத்தால் மழைக்காலத்தில் வெறும் குளங்கள் போலக் காட்சி அளித்தன என்றாலும், திருப்திகரமானவையாக இல்லாவிட்டால் அவற்றைத் திருப்பி யனுப்பி விடுவோம் என்று வியாபார ஒப்பந்தத்தில் குறிப்பிடாத காரணத்தால் திருப்பி அனுப்பமுடியாமல், இந்திய மக்களின் வரிப்பணத்தில் இலட்சக் கணக்கான ரூபாய்களை வெறும் கரியாக்கியதும் இந்தக் காலத்தில் தான் நடைபெற்றது.

சிந்திரி எரு உற்பத்தித் திட்டம், ரயில்வேக்களுக்கு சாமான் வாங்கும் திட்டம், சுரங்க வேலைகளை ஒழுங்காக நடத்திச் செல்லும் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களின் பெயரால் பணம் பாழாகிய படலம் நடைபெற்றதும் இதே காலத்திய சம்பவம்தான்.

இந்தியாவின் வரலாற்றிலேயே வேறு எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு அடிக்கடி ரயில்கள் கவிழ்ந்ததும், பிரயாணிகள் மாண்டதும், ரயில் பிரயாணம் என்றாலே மரணபுரிப் பிரயாணம் என்கிற பேச்சு பொதுமக்களிடத்திலேயே நடமாடத் தொடங்கியதும், இதே காலத்திய நிகழ்ச்சிகள்தான்.

தென்னாட்டில் ராயலசீமையில் இன்றையதினம் பயங்கரமான கோர பஞ்சம் ஏற்பட்டு, அந்த

நாட்டு மக்கள் வேதனையின் பிம்பங்களாக உலவுகிறார்கள் என்றால் அதற்குக் காரணமாக இருந்தது இதுநாள் வரை நேரு நடத்திக் கொண்டிருந்த அற்புதமான மந்திரி சபையின் அருமையான உணவுத் திட்டம்தான்.

அதிக உற்பத்தி என்ற பெயரால் பணத்தை இலட்சம்—பல இலட்சம்—கோடி என்று வாரி இறைத்து விட்டு, இறுதியில், மொத்த உணவு உற்பத்தியை முன்னர் இருந்ததை விடப் பல மடங்கு குறைவானதாக ஆக்கியிருக்கிற திறமையும் தைரியமும் இந்த மந்திரிசபையின் தனிப்பெரும் உடமைகள்தான்.

தென்னாட்டு மக்கள் அத்தனை பேரையும், அரிசி உண்பவர்கள், ஆகவே அநாகரிகம் மிகுந்தவர்கள் என்று ஆணவத்தோடு தாக்கிப் பேசிய ஆகாவழிப் பேர்வழி ஒருவரைத் தன்னுடைய அருமை அமைச்சராகக் கொண்டிருந்ததும் இந்த மந்திரி சபையேதான்.

பெண்கள் குலத்துக்குப் புது வாழ்வைத் தருவதற்காக டாக்டர் அம்பேத்கார் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்துச் சட்டத்திருத்த மசோதாவை ஐந்தாண்டு காலம் ஆலோசனை செய்துவிட்டு இறுதியில் அடியோடு கைவிட்டுவிட்டது இந்த அதி அற்புதமான ஜவஹர் மந்திரிசபையின் அதி ஆச்சரியமானதோர் சாதனைதான்.

ஆயிரக்கணக்கான அரசியல் தொண்டர்களையும எஃகு உள்ளம் படைத்த தியாக சீலர்களையும் விசாரணையின்றிக் காவலில் அடைத்து வைத்து ஜனநாயகக் கோட்பாட்டிற்கே மாபெரும் துரோகம் இழைத்தது இந்த மந்திரிசபைதான்.

பொது மக்கள் மன்றத்தின் பேசும் குரல்களாக விளங்கும் பத்திரிகைகளுடைய இடுப்பை முறித்துக் கழுத்தை நெறிப்பதற்காக மிகக் கொடியதோர் அடக்குமுறைச் சட்டத்தை பத்திரிகைச் சட்டம் என்ற பெயரால் தைரியமாகக் கொண்டுவந்து துணிச்சலாக நிறைவேற்றியவர்கள் இந்த மந்திரிசபையின ஜனநாயக அமைச்சர்கள்தான்.

மந்திரிசபை இவ்வளவு மட்டரகமானதாக இருக்கிறது, ஆகவே இதனை, நேருவே, நீர் உடனே திருத்தி அமைத்தாக வேண்டும் என்று காங்கிரஸ் வட்டாரத்திலேயே பலமானதோர் புரட்சிக் குரல் எழுப்பப் பட்டு வந்தது சென்ற பல ஆண்டுகளாக.

அந்தப் புரட்சிக் குரல் எழுப்பப்பட்ட வேளைகளிலெல்லாம் நேரு, ஆமாம், அவசியம் செய்யத்தான் வேண்டும், செய்யத்தான் போகிறேன் என்று விடை கூறிவந்தார்.

மந்திரி சபையிலே புது இரத்தம் பாய்ந்தாக வேண்டும—உண்மைதான் என்று வேகவேகமாகத் தலையை அசைத்து, மிக அவசர அவசரமாகத் தன்னுடைய உள்ளக் கருத்தை, ஊராருக்கெல்லாம் உரைத்து வந்தார்.

தேர்தலுக்குப் பிறகு அமையவிருக்கும் மந்திரிசபை, புத்தம் புதியதாகவும பழைய பெருச்சாளிகளை விரட்டியடித்துவிட்ட தன்மை நிறைந்ததாகவும இருக்கும் என்ற எண்ணத்தை, ஆசையை, பகல் கனவை, தேசிய இளைஞர்களின் மனத்திரையில் நிழலாடுமபடி செய்து வந்தார்.

புதிய ஆட்களைக் கொண்டு புதிய முறையில அமைக்கப்போகிறேன் புதிய மந்திரி சபையை என்று ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்த நேரு உண்மையாகவே தன்னுடைய புதிய மந்திரி சபையை அமைத்து விட்டார் இந்த வாரம்.

ஆனால் இந்தப் புதிய மந்திரி சபையிலே புதுமை ஏதாவது இருக்கிறதா? பழைய மந்திரி சபையில் காணப்படாத முற்போக்கு அம்சங்கள் இதிலே ஏதாவது நுழைக்கப் பட்டிருக்கின்றனவா? புதிய முற்போக்கு அம்சங்கள் நுழைக்கப் படாவிட்டாலும் போகட்டும், பழைய மந்திரி சபையில் காணப்பட்ட பிற்போக்குச் சக்திகளாவது விரட்டியடிக்கப் பட்டிருக்கின்றனவா? நெடுநாட்களாக நேரு நமக்கெல்லாம சொல்லிக் கொண்டிருந்தபடி புதிய இரத்தத்தை வேகமாகப் பாய்ச்சவிட்டிருக்கிறாரா இந்த மந்திரி சபையில்?

இந்த அடிப்படைக் கேள்விகளை மனக்கண் முன் நிறுத்திக்கொண்டு பண்டித ஜவஹர் வெளியிட்டிருக்கிற மந்திரிகளின் பட்டியலை மீண்டும் படித்துப் பார்த்தோம். பழைய மந்திரி சபையை விட இந்தப் புது மந்திரி சபை துளியளவுகூட முற்போக்கு நிறைந்ததாகக் காணப்படவில்லை.

எந்தெந்தப் பழமைப் பிம்பங்களும் பிற்போக்குச் சக்திகளும் திறமையற்ற திருமேனிகளும் தேவையில்லாத தேசியங்களும் பழைய மந்திரி சபையில் திருக்காட்சி வழங்கினவோ, அந்த திருக்கூட்டம்தான் இந்தப் புதிய மந்திரி சபையிலும் அட்டைகள் போல ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

இனி என்முன் உன் முகத்தைக் காட்டாதே, ஓடிப்போ என்றார் கிருஷ்ணதேவராயர்.

பானையால் முகத்தை மட்டும் மறைத்துக்கொண்டு ராயர் முன்னால் வந்து நின்றான் தென்னாலி விகடன்.

இந்த மந்திரிசபை வேண்டாம்—நேருவே புதிய மந்திரி சபையைத் தாரும் என்று கேட்டனர் தேசியவாதிகள்.

ஆஹா அப்படியே என்று சொல்லிய வண்ணம், பழைய மந்திரிகளைக் கொண்டே புதிய மந்திரி சபையை அமைத்துக் காட்டினார் நேரு.

பழைய கள்ளையே புதிய மொந்தையில ஊற்றி, இந்தாருங்கள் புதுப் பண்டம் பருகுங்கள் என்று கூறுகிறார்.

உதவாக்கரைப் புத்தகமென்று நாம் ஒதுக்கித் தள்ளிய சுவடியையே புதிய அட்டை போட்டு, எடுத்துக் கொள்ளுங்கள்—புதிய புத்தகம் என்று இயம்புகிறார்.

வேண்டாமப்பா இந்தப் பேனா—எங்குப்பார்த்தாலும ஓட்டையிருக்கிறது இதிலேயென்று கூறினோம் நாம்.

அப்படியானால் சரி, இந்தா புதுப் பேனா என்று ஒரு பேனாவைத் தருகிறார் நேரு. புதிய பேனாவா இது? அல்ல! அதே பழைய பேனா! ஆனால் புதிய வர்ணம் பூசப்பட்டிருக்கிறது இப்போது! வர்ணம்தான் புதிதாகப் பூசப்பட்டிருக்கிறதே தவிர ஓட்டைகள் யாவும் முன் இருந்தவை இருந்தபடியே தான் இருக்கின்றன. அந்த நிலையிலே மாறுதல் துளியும் இல்லை.

வேறு யாராவது இப்படிச் செய்திருந்தால் மக்களை ஏமாற்றுகின்றார் இந்த மனிதர் என்று நாம் தாராளமாகச் சொல்லி விருப்போம்.

ஆனால் இப்போது இப்படிச்செய்திருப்பவரோ நேரு—அவரோ மனிதருள் மாணிக்கம்—அவரைப்

(13-ம் பக்கம் பார்க்க)

குதிரைப் பந்தயத்துக்கு—ஜே!

"நமஸ்காரம்!"

"நமஸ்காரம்!"

"என்னை அழைத்தீர்களாமே! ஏன்?"

"வேறொன்றுமில்லை. நான் அமைக்க இருக்கும் மந்திரி சபையில்......"

"நானும் ஒரு மந்திரியாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவதாக என் நண்பர் ஒருவர் சொன்னார்."

"ஆமாம். அப்படி இருப்பதில் உங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லையே!"

"இல்லை. ஆனால்.........?"

"ஆனால் என்ன?"

"வேறொன்றுமில்லை. நீங்கள் அமைக்கப்போவது காங்கிரஸ் மந்திரிசபை. காங்கிரஸ் கட்சியோ, குதிரைப் பந்தயங்களை ஒழித்தாகவேண்டுமென்று நீண்ட காலமாக முழக்கமிட்டு வருகிறது."

"ஆமாம். உண்மைதான். குடியைக் கெடுக்கும் குதிரைப் பந்தயம் ஒழிக என்று நான் கூடத்தான் ஆயிரக்கணக்கான மேடைகளில் பேசியிருக்கிறேன். ஆனால் அந்தப் பேச்சுக்கும், நீங்கள், என்னுடைய மந்திரி சபையில் ஒருவராக இருப்பதற்கும் என்ன சம்பந்தம்?"

"நான்.........."

"சொல்லுங்களேன் தாராளமாக. நீங்கள்......."

"இருபத்திநான்கு பந்தயக் குதிரைகளை வைத்து வளர்த்து வருகிறேன். என் பெயரில அந்தக் குதிரைகளெல்லாம் பந்தயத்தில ஓடுகின்றன. அவற்றை விட்டுவிடுவதோ என்னால முடியாதகாரியம். இந்த நிலையில்..."

"நீங்கள் எப்படி என்னுடைய மந்திரிசபையில் இருக்கமுடியும் என்று யோசிக்கிறீர்களா?"

"ஆமாம்! அந்த யோசனைதான்! குதிரைப் பந்தயத்தை ஒழிக்கிற கட்சி காங்கிரஸ் கட்சி! அந்தக் கட்சியின் மந்திரி சபையிலே குதிரைப் பந்தயமாடுகிற நான் ஒரு மந்திரி! இப்படியிருந்தால் நிலைமை, கேலி செய்ய மாட்டார்களா மக்கள்?"

"அந்தக் கவலைதானா உமக்கு? போமய்யா போம்! மக்களாவது கேலி செய்வதாவது? கால் வயிற்றுக்கும் போதாத ஆறவுன்ஸ் அரிசியைக் கொடுத்த போதே கேலி செய்யாத மக்கள் இதற்குத்தானா கேலி செய்யப் போகிறார்கள்! அப்படித்தான் கேலி செய்தாலென்ன? கேலி செய்பவர்களையெல்லாம் தேசத் துரோகிகள் என்று கூறிவிட்டால் போகிறது!"

"....................."

"என்ன ஓய் அப்படி விழிக்கிறீர்? ஒழிக குதிரைப் பந்தயம்—ஒழிக என்று வாய்கிழியக் கூச்சலிட்ட நானா இப்படிப் பேசுகிறேன் என்று விழிக்கிறீரா? இது தான் ராஜீய தந்திரம் ஓய், இது தான் ராஜீய தந்திரம்."

"அப்படியானால் சரி. மெத்த சந்தோஷம். தங்களுடைய மந்திரிசபையில் ஒருவனாக இருப்பதில் எனக்கென்ன நஷ்டம்!"

"அதுதான் சரி. அப்படித்தான் பேசவேண்டும். சரி. போய் வருகிறீரா? வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டு இலாகாவை உமக்குத் தந்திருக்கிறேன். சந்தோஷம் தானே!"

"இலாகா எதுவாயிருந்தாலென்ன? சந்தோஷம் தான்! போய்வருகிறேன்."

* * *

மேலே தரப்பட்டுள்ள உரையாடல் கற்பனையல்ல. சென்னை தியாகராய நகரில் பஸ்லுல்லா ரோடில் ஆச்சாரியாருடைய இல்லத்தில் உண்மையாகவே நடைபெற்ற உரையாடல்தான் இது.

உரையாடல் நடைபெற்ற நாளை நிச்சயமாகக் குறிப்பிட்டுக் கூறுவதற்கில்லை. ஆனாலும் உத்தேசமாகக் கூறலாம். அன்பர் ஆச்சாரியார், காங்கிரஸ் கட்சியின தலைவராக இருக்க ஒப்புக்கொண்ட நாளுக்கும், அவர் தன்னுடைய மந்திரி சபைப் பட்டியலைக் கவர்னரிடம் சமர்ப்பித்த நாளுக்கும் இடையே உள்ள பத்து நாட்களில், ஏதோ ஒரு நாளில் தான் இந்த உரையாடல் நடைபெற்றிருக்கிறது.

உரையாடல் யார் யாருக்கிடையே நடைபெற்றிருக்கும் என்பதை வாசகர்கள் இதற்குள்ளாகவே தெரிந்து கொண்டிருக்கக்கூடும்.

ஆச்சாரியாருடைய மந்திரி சபையில் வீட்டுவாடகைக் கட்டுப்பாட்டு இலாகாவின் மந்திரியாக இருக்கும் இராமநாதபுரம் ராஜாவுக்கும பூசுரர் தலைவர் ஆச்சாரியாருக்குமிடையேதான் இந்த உரையாடல் நடைபெற்றிருக்கிறது.

"எப்படியய்யா தெரியும் உமக்கு இப்படி ஒரு உரையாடல் நடைபெற்ற விவரம்? உரையாடல் நடைபெற்றபோது நீர் என்ன ஆச்சாரியாரின் வீட்டிலே இருந்தீரா? அல்லது ராமநாதபுரம் ராஜாவின் அந்தரங்கக்

காரியதரிசியா நீர்? எப்படி நம்புவது நீர் கூறுவதை?" என்று வாசகர்கள் கேட்கக் கூடும்.

வாசகர்கள் அதிகமாக ஒன்றும் சிரமப்படத் தேவையில்லை. நாம் குறிப்பிட்டுள்ள உரையாடல் உண்மையில் நடந்ததா இல்லையா என்கிற சந்தேகம் தீர வேண்டுமானால், வாசகர்கள், 17-4-52-ம் தேதியிட்ட "சுதேசமித்திரன்" இதழை வாங்கி, அதன் இரண்டாம் பாகத்தை எடுத்து, அந்தப் பக்கத்தின் இரண்டாவது பத்தியைப் படித்துப் பார்க்கட்டும். படித்துப் பார்த்தால் நாம் கூறுவது எவ்வளவு உண்மை என்பதை அவர்களே திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ளுவார்கள்.

இராமநாதபுரம், ஏப்ரல் 17.

நேற்று மாலை இராமநாதபுரம் கிளப் கட்டிடத்தில், வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டு இலாகா மந்திரி இராமநாதபுரம் இராஜாவுக்கு வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது. அவ்வமயம் அவர், தாம் மந்திரிசபையில் நுழைந்ததுபற்றிக் குறிப்பிடுகையில், முதலில் காங்கிரஸ் தலைவர்கள தம்மை மந்திரிப் பதவி ஏற்க அழைத்த போது தாம் மறுத்து விட்டதாகக் கூறினார். மேலும் அவர் கூறியதாவது:—குமாரசாமி ராஜா மூலம் ராஜாஜியின் கடிதம் கிடைத்ததும் ராஜாஜியைச் சந்தித்தேன். எனனைப்பற்றிய சில சந்தேகங்களையும் விளக்கினேன். நான இருபத்திநான்கு பந்தயக் குதிரைகளை வளர்ப்பதாகவும், என் பெயரில் அவை பந்தயத்தில் ஓடுவதாகவும் அவற்றை விட்டு விடுவது அசாத்தியமாக இருக்குமென்றும் ராஜாஜியிடம் கூறினேன். அதற்கு ராஜாஜி பின்வருமாறு கூறினர்:— இங்கிலாந்து பிரதம மந்திரி சர்ச்சில் கூட பந்தயக் குதிரைகள் வைத்திருக்கிறார். பொழுதுபோக்கிற்காக நான்கூட சிலசமயம்மாலைகளில் பந்தயம்பார்க்க விரும்புவேன்."

17—4—52-ம் தேதியிட்ட "சுதேசமித்திரன்" இதழில் இரண்டாம் பக்கத்தில் இரண்டாம் பத்தியில் வெளியாகியுள்ள செய்திக் கதிர் இது.

இப்போது கூறுங்கள் வாசகர்களே, நாம் குறிப்பிட்டுள்ளது போன்ற உரையாடல் ராஜாஜிக்கும் ராமநாதபுரம் ராஜாவுக்குமிடையே நடைபெற்றிருக்குமா இருக்காதா?

* * *

"குதிரைப் பந்தயத்தில் ஈடுபடுவதால் கெடுதி எதுவும் கிடையாது. ரேஸ் விளையாடுவது ஒரு தவறுன காரியமாகாது. ரேஸ் ஆடுவதால், அப்படி ஆடுபவர்களுக்கு மன நிம்மதியும ஓய்வும உற்சாகமும் உண்டாகிறது. என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன்: ரேஸ், ஓர் அற்புதமான விளையாட்டு."

அதை கூட்டத்தில் இராமநாதபுரம் ராஜா இதுபோலப் பேசியிருப்பதாக 16—4—52-ம் தேதி "மெயில்" பத்திரிகை நமக்குத் தெரிவிக்கிறது.

* * *

"கிண்டி ரேஸ்—கூண்டோடு ஒழிக!"

"குடியைக் கெடுப்பது குதிரைப் பந்தயம்!"

"வாழ்வை வதைப்பது ரேஸ் விளையாட்டு!"

"ஒழித்தே தீருவோம் குதிரைப் பந்தயத்தை!"

"குதிரைப் பந்தயத்தை நாம் ஒழிக்காவிட்டால் நம்மை ஒழித்துவிடும் குதிரைப் பந்தயம்!"

"ஏழைகள் வாழ்க்கையை வதைப்பது இப் பந்தயம்!"

இப்படியெல்லாம் முழக்கமிட்டனர் தேசியவாதிகள் முன்னாளில்.

குதிரைப் பந்தயத்தால் விளையும் கொடுமைகளை அழகழகாக எடுத்துக்காட்டினர்.

காவியமாகவும் ஓவியமாகவும் மேடைப் பேச்சாகவும் பத்திரிகைக் கட்டுரையாகவும் பற்பல உருவில் வெளிவந்தது அவர்களுடைய ரேஸ் ஒழிப்புப் பிரசாரம்.

குதிரைப் பந்தயத்தால் நாசமான குடும்பங்களின் வரலாறுகளைத் தேசிய பிரசாரகர்கள் அந்தக் காலத்தில் மேடைகளில் எடுத்து விளக்கியபோது கல்லும் கசிந்துருகும். மரமும் கூட அழும். அவ்வளவு உருக்கமாக, அவ்வளவு அற்புதமாக, அவ்வளவு இனிமையாக, குதிரைப் பநதயத்தின் கொடிய உருவத்தைச் சித்தரித்துக்காட்டுவர் தேசியவாதிகள்.

வெற்றிலைக் கடை வேலாயி மெய்மறந்து தூங்கிக்கொண்டிருந்தாள் தன்னுடைய குடிசையில - தினம் தினம் கால் கால் அணுவாகச் சேர்த்து, ஒரு ஒததை ரூபாயாக்கி, அரும்பாடுபட்டுச் சேர்த்த அந்தப் பணத்தை, வேறு எங்கே வைத்தாலும் தன் கணவன் எடுத்துக் கொண்டு போய்விடுவான் என்றெண்ணி, தன்னுடைய முந்தானையிலேயே முடிந்துவைத்துக் கொண்டிருந்தாள் வேலாயி, கணவன் கருப்பண்ணன் வந்தான். வேலாயியின் முந்தானையில் முடிச்சு ஒன்றைத தெரிவதைக் கண்டான். விஷயம் இன்னது என்பது அவனுக்குப் பளிச்சென விளங்கிவிட்டது,

கேட்டால் கொடுக்கமாட்டாள் வேலாயி. அது அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அவளுக்குத் தெரியாமல் அதை அவிழ்த்து எடுத்துக்கொண்டு போய்விடவேண்டுமென்று எண்ணினான் கருப்பண்ணன். மெதுவாகத்தான் அவிழ்த்தான் முடிச்சை. ஆனாலும் வேலாயி விழித்துக்கொண்டாள். ரூபாயைத் தரமறுத்தாள். அவ்வளவுதான். பளீரென ஓர் அறை விழுந்தது அவள் முதுகில். பணத்தை எடுத்துக் கொண்டு நேரே கிண்டிக்குப் போனான் கருப்பண்ணன் சுடுகாட்டுக்குப் போன பிணம் திரும்பிவருமா? பணம் தொலைந்தது. அவனும் அவன் மனைவியும் அன்றுமுதல் மூன்று நாட்கள் பட்டினி.

இப்படிப்பட்ட பல கதைகளைக் கேட்பவர் உள்ளம் உருகும் விதத்திலே எடுத்துக்கூறுவர் தேசியப் பேச்சாளர்கள். கூறிவிட்டு, கூட்டத்தைப் பார்த்து, "ஆகையால் மஹாஜனங்களே! நீங்கள் கூறுங்கள்! இப்படிப்பட்ட குதிரைப் பந்தயம் இனியும் இருக்கவேண்டுமா?" என்று கேட்பர். கூட்டம் சும்மா இருக்குமா? கூடாது கூடாது என்று இடிமுழக்கம் எழுப்பும். "குதிரைப் பந்தயம் கூடாது என்று மக்கள் மன்றம் தீர்ப்பளித்துவிட்டது. உடனே பந்தயத்தை ஒழிக்கப் போகிறார்களா இல்லையா இந்தப் பிரிட்டிஷ் சர்க்கார்?" என்று பலம் பொருந்திய பிரிட்டானியத்திற்கே ஒரு மகத்தான அறைகூவலை விடுத்துத் தன் சொற்பொழிவை முடித்துக் கொள்வார் பிரசங்கி.

இந்தியா சுதந்தரநிலை அடைவதற்கு முன்னால் இத்தகைய காட்சிகளைச் சர்வசாதாரணமாக நம் மாகாணமெங்கும் யாரும் பார்த்திருக்கலாம்.

குதிரைப் பந்தயத்தால் விளையும் கொடுமைகளை எடுத்து விளக்குவதைத் தன்னுடைய பிரசாரத் திட்டத்தின் முக்கியமான பகுதியாகக் கொண்டிருந்தது காங்கிரஸ் அந்தக் காலத்தில்.

இப்போதோ காங்கிரஸ் கட்சியினர் அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கின்றனர்.

அவர்கள் நினைத்தால் ஒரே நொடியில ஒழித்துவிட முடியும் குதிரைப் பந்தயத்தை.

ஆனால் ஒழிக்க நினைக்கிறார்களா?

அதுதான் இல்லை!

குதிரைப் பந்தயத்தை ஒழிக்காதது மட்டுமா? குதிரைப் பந்தயமாடுவதைக் குற்றமற்ற நற்காரியம் என்று துணிந்து கூறும் ஒருவர் காங்கிரஸ் மந்திரியாகவும் வந்துவிட்டார்.

அதிலும், "நான் குதிரைப் பந்தயம் ஆடிக்கொண்டுதான் இருப்பேன். அதனைக் கட்டுப்படுத்தாமல் இருந்தால்தான் என்னால் ஒரு மந்திரியாக இருக்க முடியும்" என்கிற நிபந்தனையை விதித்துவிட்டு, அந்த நிபந்தனையை ராஜாஜி ஏற்றுக்கொண்டபிறகுதான மந்திரியாகி இருக்கிறார் அந்த மகானுபாவர்.

குதிரைப் பந்தயத்தைக் காங்கிரஸ் கட்சி ஒழித்துக்கட்டும் இலட்சணம் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா?

என்னால் ரேஸ் ஆடாமல் இருக்க முடியாது என்கிறார் ஒரு மந்திரி!

அதனாலென்ன தவறு? பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் கூடத்தான் ரேஸ் ஆடுகிறார்! என்று அதற்குத் ததாஸ்து கூறுகிறார் பிரதம மந்திரி!

இப்படிப்பட்ட மந்திரிகளைக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சிதான் முன்பு, குதிரைப் பந்தயத்தை ஒழிக்காததற்காக பிரிட்டிஷ் ராஜ்யத்தை சைத்தான் ராஜ்யம் என்று கேலி பேசிற்று.

குதிரைப் பந்தயம் ஒழிக—அன்று முழங்கினர் அப்படி!

குதிரைப் பந்தயத்திற்கு ஜே—இன்று கூவுகின்றனர் இப்படி!

குடியைக் கெடுப்பது குதிரைப் பந்தயம்—அன்று விளக்கினர் அதுபோல!

உற்சாகம் அளிப்பது குதிரைப் பந்தயம—இன்று கண்டுபிடிக்கின்றனா இந்த அமொக்காவை!

நாணயமானதுதானா இந்தப் போக்கு? நேர்மையானதுதானா?

அதிகாரத்திற்கு வருமுன் ஒரு பேச்சு! வந்தபின் வேறொரு பேச்சு!—முறைதானா?

காங்கிரஸ் வாதிகளே, பதில் கூறுங்கள்!

போர்வாள்

சந்தா விவரம்

ஓராண்டு	ரூ. 6—8—0
6 மாதம்	ரூ. 3—4—0

போர்வாள் அலுவலகம்
131, பிராட்வே, சென்னை-1.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி இப்படிச் சொல்ல முடியுமா- சொன்னால்தான் சும்மா இருப்பார்களா தேசியத் தம்பிகள்—ஆஹா எங்கள் மாணிக்கத்தையா இப்படி மனம் துணிந்து தூற்றினாய் என்று சீறிக்கொண்டு வந்துவிட மாட்டார்களா நம்மீது கடுங்கோபத்தைப் பொழிய!

பழைய மந்திரி சபையில் கொலுவீற்றிருந்த முக்யஸ்தர்கள் அத்தனை பேரும் இந்த மந்திரி சபையிலேயும் இடம் பெற்றிருக்கின்றனர் முன்னர் இருந்தவர்களிலே ஒருவர் தான் இப்போது காணப்படவில்லை. அந்த ஒருவர்—ஸ்ரீலஸ்ரீ முன்ஷி—தேர்தலுக்கே நிற்காதவர்-ஆகவே பாராளுமன்றத்தை இம்முறை எட்டியே பார்க்காதவர் — எனவே தான் அவரை விட்டுவிட வேண்டியதாயிற்று. இல்லையானால் நேரு அந்த முன்ஷியையும் நிச்சயமாகச் சேர்த்திருப்பார் இந்தப் புதிய மந்திரி சபையிலே.

மவுலானா அபுல்கலாம் அசாத்,

என். கோபாலசாமி அய்யங்கார்

இராஜகுமாரி அமிர்தகௌரி

டாக்டர் கைலாசநாத் கட்ஜூ

ரபி அகமத் கித்வாய்

சி. டி. தேஷ்முக்

ஜக்ஜீவன்ராம்

இவர்கள் அத்தனை பேரும் இந்தப் புதிய மந்திரி சபையிலேயும் காணப்படுகின்றனர்.

இவர்கள் தான் பழைய மந்திரி சபையிலிருந்த மூல புருஷர்கள்,

இந்த மூலபுருஷர்கள் அத்தனை பேரும் இந்தப் புதிய மந்திரிசபையிலேயும் பவனி வருகிறபோது, இந்தப் புதிய மந்திரிசபை எப்படி உண்மையிலேயே புதிய மந்திரி சபையாக இருக்கமுடியும்?

புதிய மந்திரிசபை என்ற பெயரில் உள்ள பழைய மந்திரிசபை தான் இது.

ஆம், அதுதான் உண்மை.

உண்மை அதுவாக இருக்கிற காரணத்தால், அந்தப் பழைய மந்திரி சபையின் ஆட்சிக் காலத்தில் இந்தியத் துணைக்கண்டமெங்கும் திக்விஜயம் செய்துவந்த அதே பசியும் பஞ்சமும் பட்டினியும், அதே லஞ்சமும் ஊழலும் திறமையின்மையும், அதே பஞ்சாங்கப்புத்தியும் வர்ணாஸ்ரம வெறியாட்டமும் அடக்குமுறைப் போராட்டமும்தான் இனியும் இந்த இந்தியாவிலே வீர உலா வந்தபடி இருக்கும், சந்தேகமில்லை.

பழைய மந்திரிசபையின் மறுபதிப்புத்தான் இந்தப் புதிய மந்திரி சபை என்பது மட்டுமல்ல நம்மால் கவனிக்கப்படவேண்டிய உண்மை. இந்த மந்திரிசபைப் பட்டியலிலே வேறோர் புதுமை காணப்படுகிறது. அந்தப் பூணாரம் பூண்ட புதுமையை நினைத்தால்தான் நமக்கு சிரிப்பு தாங்க முடியவில்லை ஸ்ரீலஸ்ரீ கோபாலசாமி அய்யங்காரை, பாதுகாப்பு இலாகாவின் மந்திரியாக ஆக்கியிருக்கிறாரே நேரு அந்த விசித்திரத்தைத்தான் நாம் குறிப்பிடுகிறோம்.

பட்டாளத் துறையின் தலைவர், ஓர் அய்யங்கார்! எவ்வளவு கோமாளித்தனமானதோர் வேடிக்கை இது.

போர் என்ற பெயரைக் கேட்டாலே பத்துமைல் தூரம் பயந்து ஓடுகிற பரம்பரைப் பண்புபடைத்த பார்ப்பன குலத்துக் கிழவர் ஒருவருக்குப் போர்த்துறைத் தலைவர் பட்டம் தந்திருக்கிறார் நேரு!

இதைவிட வேடிக்கை, கோமாளித்தனம், விசித்திரம், விகடம், வேறொன்று இருக்கமுடியுமா?

புலிகளின் கூட்டத்திற்குத் தலைவராக ஒரு நரி இருக்கமுடியுமா?

சிறுத்தைகளின் காட்டுக்கு வேந்தன் ஒரு சிறு முயல் என்றால் பொருந்துமா?

சிங்கஏறுகளுக்குக் கட்டளையிடும் பொறுப்பு ஒரு சிலந்தியிடம் என்றால் கேட்பவர்கள் கைகொட்டி நகைக்கமாட்டார்களா?

வீரத் திராவிடர்களும் தீரம் மிக்க பஞ்சாபியர்களும், வங்கவேங்கைகளும், கூர்க்க சிப்பாய்களும் போர் மறவர்களாக இருக்கிற இந்தியப் பட்டாளங்களின் தலைவர், ஒரு கோபாலசாமி அய்யங்காரா?

பரம்பரை பரம்பரையாக வாள் ஏந்தி வில் போரிட்டுவரும் பற்பல இனங்களின் தலைவராக இருக்கும் வாய்ப்பு புல்லாயுதமன்றி வேறாயுதம் எதும் ஏந்தியறியாத ஓர் புரோகித இனத்தவருக்கா?

என்ன வேடிக்கை இது? ஏன் இந்தக் கோமாளித் தனத்தைச் செய்திருக்கிறார் நேரு?

"பிராமணா போஜனப் பிரியா" என்று சமஸ்கிருதப் பழமொழியே இருக்கிறதே நாட்டிலே!

"பந்திக்கு முந்தி, படைக்குப் பிந்தி" என்பது பிராமண குலத்தவரை முன்வைத்து ஏற்படுத்தப்பட்ட பழமொழிதானே!

தெரியாதா நேருவுக்கு? தெரிந்துமா இந்த விசித்திர விளையாட்டை ஆடியிருக்கிறார்?

வேடிக்கையான சம்பவம் இது. ஆனால் வேதனை நிறைந்த அம்சம் ஒன்று இருக்கிறது நேருவின் இந்த மந்திரிசபையில்.

இந்த மந்திரிசபையில் சென்னை மாகாண வாசிகள் மொத்தம் மூன்று பேர் இருக்கின்றனர். அந்த மூன்றுபேரும் ஒரே இனம்—பிராமண இனம்!

நியாயமா?

சென்னை மாகாண ஜனத்தொகையில் நூற்றுக்கு மூன்று பேர்கூட இல்லை பிராமண குலத்தவர்கள்!

ஆனால் நேருவின் மந்திரிசபையில் சென்னை மாகாணத்திற்கென்று தரப்பட்டுள்ள இடங்கள் நூற்றுக்கு நூறும் பிராமண இனத்தவருக்கே தரப்பட்டிருக்கின்றன.

இதன் பெயர்தான் ஜனநாயகமா?

எந்த ஒரு ஜாதிக்கும் நான் தனிச்சலுகை எதுவும் காட்டுவதில்லை என்று அடிக்கடி தற்பெருமை பேசுகிறாரே நேரு, அந்தத் தனிச் சலுகை காட்டாத தன்மை என்பது இதுதானா?

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்

என். கோபாலசாமி அய்யங்கார்

வி. வி. கிரி

ஆகிய மூன்று பார்ப்பன சிகக்களைத் தவிர வேறு யாருமேவா கிடைக்கவில்லை சென்னை மாகாணத்தில் மந்திரிகளாக இருக்க?

அறிவாற்றல்கள் நிரம்பிய சர் ஆற்காடு இராமசாமி முதலியார் இருக்கிறாரே—தெரியாதா நேருவுக்கு?

(16-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

இதுதான் உலகம்!

[நா. நிலத்தலைவன்]

காலையிலிருந்து மாலைவரை உழைத்துவிட்டு அலுத்துப்போன உடல், களைத்த முகம், உடைந்த உள்ளம் ஆகியவைகளுடன், தலையில் கவிழ்த்த கூடையுடன், தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கவனாய் இவ்வுலக நினைவற்றுத் தெருவில் போய்க்கொண்டிருந்தான் கந்தன்.

கந்தன் பரம்பரைத் தொழிலாளியல்ல. 'விதிவசத்தால்' தொழிலாளியாக ஆனான். "உலகத்தில் பணக்காரர் என்ற ஒரு பிரிவு இருப்பதற்காக ஏழைகள் என்ற ஒரு பிரிவு இருக்கவேண்டும்; ஒரு கூட்டம் உழைக்காமல் உண்பதற்காக, மற்றொரு கூட்டம் உழைத்து உழைத்து ஓடாய்ப் போகவேண்டும்; ஒரு சாதியினரின் மார்பில் சந்தனம் விளங்குவதற்காக மற்றொரு சாதியினரின் மார்பில் எலும்புகள் எண்ணக்கூடிய நிலையில் இருக்கவேண்டும்," என்று நாக்கில் நரம்பில்லாமல் கூறி ஆண்டவன் 'திருவுள்ள'ப்படி ஒருவன் ஏழையாகவும், மற்றொருவன் பணக்காரனாகவும் இருக்கிறான் என்று 'அவன்' மீது பழியைப் போடும் பாதகக்கூட்டத்தைக் கண்டால் கந்தனுடைய உள்ளம் குமுறும். மீசை இருந்தால்—(அவன் தான் பதினைந்து வயதுப் பாலகனாயிற்றே! இப்போதுதான் மீசை அரும்ப ஆரம்பிக்கிறது) — துடித்திருக்கும். அவனுடைய நரம்புகளில் இரத்தவோட்டம் அதிகரிக்கும். உழைக்காமல் உண்ணும் கூட்டத்தை ஒழித்துக் கட்ட உறுதிபூண்டான் கந்தன் தன் இளம் வயதிலேயே!

கந்தனும், அவன் தகப்பனும் பர்மாவிலிருந்து புறப்படுகையில் காலதேவனுக்கு அவன் தகப்பன் பலி கொடுக்கப்பட்டார். ஆயினும் மனம் தளராமல் கந்தன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பெற்றெடுத்த தமிழ் நாட்டிற்கு வந்து சேர்ந்தான். அவனுக்கு அதிர்ஷ்டம் அடிக்காததாலோ, அல்லது அந்தக் கைலயநாதனின் கடைக்கண்பார்வை இவன்மீது விழாததாலோ இவன் மூட்டை சுமக்கும் வேலையை மேற்கொண்டு அதிலிருந்து வரும் பணத்தைக் கொண்டு அன்றாடம் வயிற்றைக் கழுவிக் கொண்டு வரலானான்.

பர்மாவிலிருந்தபோதே தொழிலாளர்களைப் பற்றிய பல நூல்களைப் படித்திருந்ததால் அவர்கள் நிலையை உயர்த்தத்தான் எப்படியாவது பாடுபடவேண்டும் என்று உறுதி பூண்டிருந்தான். ஆனால் தானே ஒரு தொழிலாளியின் மகனாக இருந்துகொண்டு எப்படித் தொழிலாளர் நலனுக்குப் பாடுபட முடியும்? என்று எண்ணிக் கொண்டிருந்த காலையில் ஜப்பான் பூதம் இவர்கள் செல்வத்தை யெல்லாம் அழித்ததோடல்லாமல் இவனுடைய தகப்பனின் உயிரையும் உறிஞ்சிவிட்டது. இதெல்லாம் பழங்கதை!

இன்று கந்தன் பாடுபட்டுழைக்கும் பாட்டாளி, நெற்றி வியர்வையை,—அல்ல, அல்ல—இவனுடைய இரத்தத்தைக் கொண்டு சமூகத்தை வளர்க்கும் 'பணக்காரன்' (என்று சொல்லப்படுபவர்கள்) வாழ்வதற்காக. அவர்கள் மனமுவந்து தரும் ஏதோ ஓர் அற்பக்காசைக்கொண்டு உயிர் வாழும் 'அன்றாடம் காய்ச்சி' கந்தன். கந்தன் எண்ணிப் பார்த்தான், தன்னைப்போல எத்தனை ஏழைகள் உள்ளனர் என்று. சிறுபான்மையினரான பணக்காரர் வாழ்வதற்காகப் பெரும்பான்மையினரான தொழிலாளர்கள் உழைத்து உயிர்விடுவதை, இந்தக் கேடுகெட்ட சமூகத்திற்குச் சீக்கிரம் 'சீட்டுக் கிழித்து' அனுப்பிவிட வேண்டுமென்ற முடிவிற்கு வந்தான். அவனுடைய உடம்பெல்லாம் வியர்வை கொட்டியது. தொழிலாளர் நலனுக்காகத் தான் பாடுபட வேண்டும் என்ற முடிவிற்கு வந்தான். தான் ஒரு புரட்சித் தலைவனாகி, முதலாளித்வத்திற்கு முடிவுகட்டியே தீரவேண்டும் என்ற முடிவிற்கு வந்தான். அவனுடைய உடம்பில் ஒரு புத்துணர்ச்சி தோன்றியது; அவன் உள்ளத்தில் சுறுசுறுப்பு பரவியது. தான் ஏதாகிலும் தொழிலாளர் போராட்டத்தைத் துவக்கினால், அதற்கு உதவட்டும் என்று நாள்தோறும் இரண்டணாக் காசை ஓர் உண்டிப் பெட்டியில், போட்டு வைத்திருந்தான். அதில் ஐந்து ரூபாய்க்கு மேல் சேர்ந்திருக்கும்.

காலையெல்லாம் உழைத்துவிட்டு, 'மதியத்தில்' எங்கோ ஓரிடத்தில் சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டுவிட்டு துடைத்த கை உலர்வதற்குள் மறுபடியும் உழைக்கப் போய்விடுவான் கந்தன். கதிரவன் மறைவதற்குள் கந்தனின் மடியில் ஒரு வெள்ளிக் காசு தூங்கிக்கொண்டிருந்தது. அவனுடைய செலவுகளெல்லாம் போக ஒரு நாள் உழைப்பின் பலன் அந்த ஒரு ரூபாய்! தன்னுடைய புரட்சித் திட்டத்தின் ஒரு பகுதியை நினைத்தவாறு, தலையில் கூடையைக் கவிழ்த்தவாறு, தன்னுடைய வீட்டை நோக்கிப்போய்க்கொண்டிருந்தான். வழியில் பணக்காரர் வீட்டுத் தெருவைக் கடந்து செல்ல வேண்டும். அந்தத் தெருவழியாகச் செல்லும்போதெல்லாம் கந்தனின் உடல் குமுறும். அங்கேவசித்துவந்த பணக்காரனின் குழந்தைகளும், சிறுவர்களும் கந்தனின் அழுக்கு உடையையும், அலங்கோலமான நிலையையும், வாரிவிடப்படாத தலையையும், தலையில் கவிழ்த்திருக்கின்ற கூடையையும் கண்டு, கைதட்டி, கேலி செய்வர். கந்தனுக்கு அப்போது எப்படியிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆயினும் பொறுத்துக் கொண்டிருந்தான், நாள் வருமென்று. அந்த நாளும் வந்தது!

அன்றைய தினம் வழக்கம்போல வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தான்; எங்கோ இருந்தது அவன் மனம். தலையில் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தது கூடை. தெருவில் விளையாடிக்கொண்டிருந்த பணக்கார வீட்டுப் பையனொருவன் கந்தன் பின்னால் வந்து அந்தக் கூடையை விளையாட்டாகத் தட்டிவிட்டான். கூடை உருண்டு சென்று சாக்கடையைச் சரண் அடைந்தது.

கந்தனுக்கோ கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. அந்தப் பையன் ஒரு கேலிச் சிரிப்புடன் பின்புறம் நின்றுகொண்டிருந்தான். கந்தன், கூடையை எடுக்காமல், அந்தப் பையனைப் பிடித்துப் 'பளீர்' என்று நான்கு அறைகள் அறைந்து,

பணக்காரர் மீது தனக்கிருந்த ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டான். பையன் வீட்டிற்குள் அழுது கொண்டே சென்றான். கந்தன் கூடையை எடுத்துக் கொண்டு, சுத்தம் செய்துவிட்டு, ஓரடி நகர்வதற்குள் அவன் கழுத்தின்மீது யாரோ கை வைத்தனர். 'ஏலே! என்ன திமிருடா உனக்கு! அடிச்சதோடு தெரியாம போய்கிட்டே இருக்கியே......ஏலே! மூதி! வாயில் என்னடா போட்டிருக்கே! ஏண்டா அவனை அடிச்சே?''

''ஏழையை ஏளனம் செய்தது குற்றமில்லையா? நான் செய்தது மட்டும் குற்றமா?''.........என்றான் கந்தன் உறுதியான குரலில்.

''என்னடா! என்னமோ உயர்ந்த தமிழில் பேசிப் போயிடலாம்னு நினைக்கிறயா? என்ன தைரியம்டா உங்களுக்கெல்லாம்? ஏண்டா அவனை அடிச்சேனு?''

''உழைத்து விட்டு வீட்டிற்குத் திரும்புறப்போ, தெருவும் இந்தப் பசங்க என்னைக் கேலி செய்யறதுங்க, இன்னிக்கி என்னோட கூடையைத் தள்ளிட்டாங்க''......''என்னடா! அதனாலே பணக்கார வீட்டுப் பசங்களைத் 'தொட்டு' அடிக்கிறதாடா பயலே! உங்களுக்கெல்லாம் தைரியம் அதிகமாப் போச்சுடா! உங்களை யெல்லாம் வெச்சிக்கிற 'விதத்திலே' வச்சுக்கனும், ஏலே. யார்ரா அங்கே! செவப்புத்தலை யாராவது இருக்கான்னு பாருடா. அவன்கிட்டே ஒப்பிக்கலாம்'' இச்சமயத்தில் ஒரு போலீஸ்காரன் தற்செயலாகவோ அல்லது கந்தனின் முற்பிறவித்தவப்பயனாலோ அந்தப் பக்கமாக வந்துகொண்டிருந்தான்.

''என்ன ஸார் இது? பய என்ன செஞ்சான்?'' ''நம்மோட பயலைக் கன்னம் வீங்குறாப்போல அடிச்சுப்புட்டான் உங்ககிட்டே ஒப்பிக்கலாம்னுதான் ஆளை அனுப்பியிருக்கிறேன் பயலைச் சரியாய்க் கவனிச்சுக்க, 'டேஷனிலே'.'' ''ஆமாம்சார்! சின்னப்பசங்களுக்கெல்லாம் கூட உணர்ச்சி அதிகமாப் பூத்திருக்கு இந்தக் காலத்திலே! பாருங்கசார்! இந்தப் பயலுக்கு எப்புட்டு தைரியம் இந்தா உங்கப் பயலைத் ''தொட்டு'' அடிச்சிருப்பான்? முழுக்கிறதைப் பார்!'' பணக்காரரின் 'அருளைப் பெற' ஒத்து ஊதினான் அந்தப் போலீஸ்காரன்.

''எல்லாம் இந்தக் கம்யூனிஸ்ட்கள் பண்ற வேலை. இது! இந்தக் கம்யூனிஸ்ட்கள் வந்ததிலேயிருந்து ஏழை பணக்காரன் வித்தியாசம் போகப்படாதுன்னு சொல்றாங்க! பணக்காரர் இருக்கிறவரைக்கும் ஏழைங்க இருக்கனுமோல்லியோ?' இது பணக்காரரின் பேச்சு!...

''சரி, நான் பயலைக் கவனிச்சுக்கிடுறேன், நான் வரட்டுமா சார்?-இது போலீஸ்காரனின் விண்ணப்பம்!

'உம்' கொட்டினார், 'சமத்து'—அல்ல முதலாளிகளுக்கே உரித்தான தொந்தியைத் தடவிக் கொண்டு.

போலீஸ்காரன் கந்தனை இழுத்துக் கொண்டு போனான். உணர்ச்சியற்ற சமூகத்தின் பிரதிநிதியாகக் கந்தன் சென்றான். தொழிலாளியாய் பிறந்தும், பணக்காரரின் 'அருள்' இல்லாமல் தங்களைப் போன்றவர்கள் வாழ முடியாது என்ற எண்ணத்தினைப் போலீஸ்காரன் பணக்காரரின் அடிமையாக, பிரதிநிதியாக சென்று கொண்டிருந்தான்.

உணர்ச்சிபெற்ற மக்கள், போலீஸ்காரனையும், கந்தனையும் மாறிமாறித் திறந்தவாய் மூடாமல் பார்த்தனர். போலீஸ்காரனும், கந்தனும் ஜன நடமாட்டமற்ற பிரதேசத்தை அடைந்தனர். 'போலீஸ்'காரன் திருவாய் மலரலானான்.

''ஏலே பயலே, என்னடா சொல்றே''—போலீஸ்காரனின் 'பாஷை'யைக் கந்தனால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

''என்னடா, மடிலே எம்புட்டு இருக்கு?''

''ஒன்றுமில்லிங்க''

''ஏண்டா, காலையிலிருந்து சும்மாவா இருந்தே?'' போலீஸ்காரனின் முரட்டுக் கரங்கள் கந்தனின் இளஞ் மடியைத் துழாவின. ஒரு முழு ரூபாய் கள்ளக்கபடமில்லாமல் தரையில் விழுந்தது. போலீஸ்காரன் தனக்கு நல்ல 'இரை' கிடைத்தது. என்று சிரித்தான். நல்ல

(7-ம் பக்கம் பார்க்க)

தேனிக் கலவர வழக்குக் குழு

பாண்டியராஜபுரம், மே 1.

தேனிக் கலவர வழக்கினை நடத்தும் பொறுப்பாளராகப் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வழக்கைச் செவ்வனே நடக்க, ''தேனிக் கலவர வழக்குக் குழு'' என்ற பெயரில் ஒரு குழுவினை அமைத்துக் கொண்டார். அக்குழுவின் அமைப்பு பாண்டியராஜபுரத்தில் அமைக்கப்பட்டது. குழுவில் கீழ்க்கண்டவர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள்.

தலைவர்:—உ. பு. அ. சௌந்திர பாண்டியன்.

செயலாளர்:—இரா. நெடுஞ்செழியன்

பொருளாளர்:—அ. பொன்னம்பலனார்

உறுப்பினர்கள்:—ச. தெய்வநாயகம்? ஆ. தேவராசன், தா. ஆவுடையப்பன், எம். முத்து.

குறிப்பு:—தேனிக் கலவர வழக்கு நிதிக்காக நன்கொடையனுப்பும் தோழர்கள், கீழ்க்கண்ட தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் முகவரிக்கே அனுப்பவேண்டுகிறோம்.

முகவரி;—

தோழர். இரா. நெடுஞ்செழியன்,
12, வைத்யநாத முதலி தெரு,
சேத்துப்பட்டு, சென்னை-1.

தேனிக் கலவர வழக்கு நிதி

உ. பு. க. சௌந்திர பாண்டியன் பட்டி வீரன்பட்டி	1000	0	0
தா. ஆவுடையப்பன், சோழவந்தான்	10	0	0
தி. மு. க. தவுட்டுப் பாளையம்	2	0	0
தி. மு. க. பாண்ட மங்கலம்	1	0	0
பொதுக் கூட்டம், திண்டுக்கல்	2	1	3
பொதுக் கூட்டம் கொண்டாலம்பட்டி	3	0	0
தி. மு. க. கள்ளக் குறிச்சி	5	0	0
விவசாயிகள் சங்கம் பெரிய வார்சிலை	1	0	0
பொதுக் கூட்டம், பிரமநகர்	12	10	8
தி. மு. க. இல்லக் குண்டு	10	0	0
ஒரு தோழர் இல்லக் குண்டு	1	9	3
தி.மு.க. பன்னப்பட்டி	1	9	3
என். கணேசாமி பன்னப்பட்டி	5	0	0
ஆக இதுவரையில்	1054	14	0

இரா. நெடுஞ்செழியன்
செயலாளர்.
தேனிக் கலவர வழக்கு நிதி.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரக் கலையிலே பெருந் தேர்ச்சி பெற்ற நிபுணர் ஆர். கே. சண்முகம் செட்டியார் இருக்கிறாரே—அறியாரா ஜவஹர்?

அகில உலக டாக்டர்கள் கழகத்திலே கூட பெரும்புகழ் பெறுகிற அளவுக்கு மருத்துவத் துறையில் ஈடு எடுப்பும் அற்றவராக ஜொலிக்கிறாரே டாக்டர் லட்சுமணசாமி முதலியார்—தெரிந்துகொள்ள நேரம் இடைக்கவில்லையா மனித குல மாணிக்கத்திற்கு?

உலக விஞ்ஞானிகளிலே ஒருவர் என்று பாராட்டப்படுகின்ற அறிவியல் அறிஞர் ஜீ. டி. நாயுடு கோவை நகரில் உலவுகிறாரே அறிவின் சிகரமென—அவருடைய அறிவும் ஆற்றலும் தெரிவிக்கப்படவில்லையா பண்டித நேருவுக்கு?

இவர்களெல்லாம் காங்கிரஸ் காரர்களல்லவே, இவர்களை எப்படி நான் சேர்த்துக்கொள்ள முடியும் என்று நேரு சொல்வதற்கும் வழியில்லை. ஏனெனில் அவர் கோபாலசாமி அய்யங்காரை மந்திரியாக்கியிருக்கிறார். அவர் இந்த வினாடி வரையிற்கூட காங்கிரஸ்காரராக ஆகவில்லை.

இவர்களெல்லாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்து நாங்கள் அறப்போர் புரிந்து கொண்டிருந்த காலத்தில் அந்தப் போராட்டத்தை ஆதரிக்காதவர்கள், ஆகையால் தான் நான் இவர்களையெல்லாம் மந்திரிகளாகச் சேர்க்கவில்லை என்று நேரு சொன்னால் அந்த வாதமும் பொருந்தாது. இப்போது மந்திரி நாற்காலியில் உட்காரவைக்கப்பட்டிருக்கிற டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், காங்கிரஸ் கட்சியின் பிரிட்டிஷ் எதிர்ப்புப் போராட்டங்களில் பெரும் பங்கு கொண்டவரல்ல. அந்நியர் பொருள்களைப் பகிஷ்கரியுங்கள் என்று காந்தியடிகள் அறப்போர் முழக்கம் புரிந்து கொண்டிருந்த காலத்தில், பிரிட்டிஷ் கம்பெனிகளின் கமிஷன் ஏஜண்டாக இருந்து கொண்டு, பிரிட்டிஷாரின் சரக்குகளை வேக வேகமாக இந்தியாவில் விற்பனை செய்துவந்த தியாகமூர்த்திதான் இன்றையதினம் புது தேசபக்தராக வேஷம் போடும் இந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரி.

இன்றையதினம் பாதுகாப்பு மந்திரி என்ற செல்லப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கும் நேருவின் செல்லப்பிள்ளை கோபாலசாமி அய்யங்காரும், அதுபோலவே, பரம்பரைத் தேசபக்தரல்ல. காஷ்மீர் மக்களிடம் சொற்பொழிவாற்ற பண்டித நேரு அந்த நாட்டுக்குள் நுழைந்தபோது, "நுழையாதே நேருவே! வெளியே போ!" என்று 144 போட்டவர்தான் இந்தக் கோபாலசாமியார். அப்போது அவர் காஷ்மீர் திவான்.

ஆகவே எந்த வாதப் பிரதிவாதத்தின்படி பார்த்தாலும் சரி, சென்னை மாகாணத்துக்குத் தரப்பட்டுள்ள இடங்கள் மூன்றினையும் பிராமண குலத்தவருக்கே தாரை வார்த்துத் தந்துள்ளாரே நேரு, அது சிறிதும் நியாயமான செய்கை ஆகாது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மையைக் காட்டிக்கொடுத்த துரோகிகள் வேறு கிடையாது என்ற முடிவுக்குவந்து எல்லாத் தேசிய வாதிகளையும் பகிஷ்காரம் செய்வது என்று தொடங்கிவிட்டால் அதையும் குற்றம் சொல்ல முடியாதே பழனிசாமியார்!

குடிகாரர்களைக் குற்றவாளிகளாகக் கருதுபவர்கள் அவர்களை பகிஷ்காரம் செய்யலாம் — தப்பில்லை என்றால், காங்கிரஸ்காரர்களைக் குற்றவாளிகளாகக் கருதுபவர்கள் அவர்களைப் பகிஷ்காரம் செய்வதுமட்டும் எப்படித் தவறானதாக ஆகிவிடும்?

இப்படியே ஒவ்வொரு சாராரும், அவரவர்களுக்குக் குற்றவாளிகளாகத் தென்படுபவர்களை அவரவர்கள் தண்டிப்பது என்கிற தத்துவத்தை நடைமுறைக் கிரமமாகக் கொண்டுவிட்டால் நாட்டில் அமைதி எப்படி இருக்கமுடியும்? அந்த நிலையில் நாட்டில் வெறும் பூசலும் பகைமையும் குழப்பமும் அடிதடியும்தானே எங்கெங்கும் நிறைந்திருக்கும்?

அப்படிப்பட்ட அராஜக நிலை நாட்டிலே வரவேண்டும் என்பதுதான் பழனிசாமியாரின் ஆசையா?

அவருடைய ஆசை அது அல்ல என்றால் பிறகு ஏன் அவர் இப்படிப்பட்ட ஆபத்தான ஆலோசனையைத் தந்திருக்கிறார்?

"இந்த ஆலோசனை இவ்வளவு ஆபத்தானது என்பது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் நான் இப்படியெல்லாம் சொல்லியிருக்க மாட்டேன்" என்று ஒருவேளை பழனிசாமியார் இயம்பக்கூடும்.

அப்படி இயம்புவாரானால், இந்த அரசியல் அரிச்சுவடியைக் கூட அறியாதவர் மந்திரியாக இருப்பதற்கே தகுதியற்றவர் என்று பொதுமக்கள் தெளிவான முறையிற் கூறிவிடுவார்களே, அதற்கென்ன பதில் கூறுவார் பழனிசாமியார்?

என்ன பதில் கூறுவார்?

நெஞ்சை அள்ளும் எழுத்தோவியங்கள்

பாதாள பைரவி	(தனலன்)	0	12
தாய்	,,	0	4
அந்த இரவு	,,	0	8
வானம்பாடி	,,	1	8
வாத்தியாரம்மா	,,	0	4
நடிகன்	,,	0	8
லீலாராணி	,,	0	8
அன்னியன்	,,	0	8
வாழும் உரிமை	,,	0	3
நாசகார சமூகம்	,,	0	8
ஆண்டோர் யார்	,,	0	4
அதிசயத் தியாகிகள்		0	12
நாடோடிக் காதல்		0	6
எழிலரசி கிளியோபாட்ரா	(குமரிமன்னன்)	1	8
சூழ்ச்சி		1	0
தீ பரவட்டும்	(அண்ணா)	0	8
நாடும் ஏடும்	,,	0	6
எமிலி ஜோலா	,,	0	8
வந்தது விபத்து	,,	0	12
விதைக்காது விளையும் கழனி	,,	0	6
ஆலையூரார் உபதேசம்	,,	0	12
தேவலீலைகள்	,,	0	8
தங்கத்தின் காதலன்	,,	0	3
தன் மதிப்பியக்கத் தோன்றல்கள்		0	8
வேலைக்காரி	(ஜீவா)	1	8
போர்முரசு		0	8
பழி		0	4
பெரிய இடத்துச் செய்தி		0	4

பகுத்தறிவுப் பாசறை
181, பிராட்வே, சென்னை-1.

Edited Printed and Published by P. O. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers. 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilanchезhiyan B.A. (Hons.)